க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை

# மதிப்பீட்டு அறிக்கை
# 2020

## 22

## தமிழ்மொழியும் இலக்கியமும்

ஆய்வு மற்றும் அபிவிருத்தி (பாடசாலைப் பரீட்சை) கிளை
ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

# மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்

**முழுப் பதிப்புரிமையுடையது.**

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020
மதிப்பீட்டு அறிக்கை - தமிழ்மொழியும் இலக்கியமும்

## பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தோற்றும் இலங்கைப் பொதுப் பரீட்சைகளில் ஒன்றான க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையின் மதிப்பீட்டு அறிக்கை தொடர்பில் சில கருத்துக்களை முன்வைப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை தொடர்பான விரிவான பகுப்பாய்வை வழங்குதல், பலம், பலவீனம் கொண்ட பகுதிகளைத் தெரிவுசெய்தல், நாட்டின் கல்வியை முன்னேற்றுவதற்கான பங்களிப்பை வழங்குதல் என்பன இவ் அறிக்கையைத் தயாரிப்பதன் பிரதான நோக்கங்கள் ஆகும்.

இந்த அறிக்கையானது கல்விப் புலத்திலுள்ள பலதரப்பட்டவர்களுக்கு க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையில் பாட அடிப்படையிலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை தொடர்பான பெறுமதிமிக்க தகவல்களை வழங்குகின்றது. ஆசிரியர்களுக்கான, இந்த அறிக்கையானது பரீட்சிக்கப்பட்ட ஒவ்வொரு திறனிலும் தேர்ச்சியிலும் பரீட்சார்த்தி பெற்ற அடைவு தொடர்பான விரிவான பகுப்பாய்வையும் கற்பித்தல் நுணுக்கங்களுக்கான வழிகாட்டல்களையும் பரீட்சார்த்திகளுக்கு விசேடமான ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பகுதிகளையும் எடுத்துக்காட்டுகின்றது. இந்த அறிக்கையானது ஒரு சோதனையின் கட்டமைப்பையும் அதன் எதிர்பார்ப்புகளையும் பரீட்சார்த்திகளுக்கும் பெற்றோருக்கும் தெளிவாக விளக்கும் அதேவேளை, பாடத்திட்டத்தை விருத்தி செய்பவர்களுக்குத் தேவையான தரவுகள், பகுப்பாய்வு தொடர்பாகவும் கல்விக் கொள்கையாளர்களுக்குத் தேவையான கலைத்திட்ட வடிவமைப்பு, வளப் பகிர்வு, ஆசிரியர் பயிற்சி முன்னெடுப்புகள் என்பன தொடர்பாகவும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகவல்களையும் வழங்குகின்றது.

இந்த மதிப்பீட்டு அறிக்கையின் மூலமான உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்துப் பயனாளிகளும் பரீட்சார்த்திகளின் அடைவுமட்டம் தொடர்பான தரவுகளைச் சரியாக அறிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு சோதனை உருப்படியின் பகுப்பாய்வு தொடர்பிலும், அவை தொடர்பிலான அவதானிப்புகள் மற்றும் ஆலோசனைகளிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். அறிக்கையில் தரப்பட்டுள்ள தரவுகளை விளங்கிக்கொள்வதற்குத் தேவையான பின்புலத்தை இத்தகவல்கள் வழங்குகின்றன. இவ் அறிக்கை வெளிப்படுத்தும் ஆலோசனைகளை இதன் பயனாளிகளாகிய கல்வியியலாளர்கள், பரீட்சார்த்திகள், கொள்கைத் திட்டமிடல் நிபுணர்கள் தத்தமது துறைசார்பாகக் கற்றல் - கற்பித்தல், கொள்கை உருவாக்கம் போன்றவற்றின்போது பிரயோகிக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இவ்வறிக்கையானது எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்படும் முன்னேற்றப்போக்கை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அளவுகோலாகவும் பயன்படும்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கல்விப்புலத்தில் எத்தகைய சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துகின்றோம் என்பதிலேயே இந்த அறிக்கையின் உண்மைப் பெறுமதி தங்கியுள்ளது என நான் நம்புகின்றேன். எனவே, க.பொ.த. (சா.தர)ப் பரீட்சையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகள், ஆலோசனைகள் தொடர்பாகவும் அவற்றை மேம்பாடடையச் செய்யும்வகையில் செயற்படுத்தல் தொடர்பாகவும் பெறுமதிமிக்கக் கலந்துரையாடல்களில் ஈடுபடவும் அழைப்பு விடுக்கின்றேன்.

இந்த மதிப்பீட்டு அறிக்கையைப் பூரணப்படுத்துவதற்குத் துணைநின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அறிக்கையை பயனாளிகளுக்கு வசதியான வகையில் நவீன செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையின் உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
பரீட்சை ஆணையாளர் நாயகம்
2024 ஆகஸ்ட் 20

| | | |
|---|---|---|
| ஆலோசனை | - | எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| கருத்துருவாக்கமும் திட்டமிடலும் | - | கயாத்திரி அபே குணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | டபிள்யு.வீ.டீ.எஸ்.எம். வரகாஹொட<br>பிரதிப்பரீட்சை ஆணையாளர் |
| உள்ளடக்க உருவாக்கத்திற்கான தலைமைத்துவம் | - | கிரித்திக்கா பகிரதன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| உள்ளடக்க உருவாக்கத் தொகுப்புக்குழு | - | கே. கணேசன்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>(கோட்டக்கல்வி காரியாலயம்) நுவரெலியா<br><br>எஸ். கணபதிப்பிள்ளை<br>உதவிக் கல்விப் பணிப்பாளர்<br>(ஓய்வு நிலை)<br><br>கே. ஆறுமுகம்<br>ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு நிலை)<br>கொழும்பு |
| | - | ஆர்.டீ. வெலிசறகே<br>ஓய்வுபெற்ற ஆசிரியர்<br><br>ஜீ. பாலதயாளன்<br>ஓய்வுபெற்ற ஆசிரியர்<br><br>பீ. நிஷாந்தி<br>ஆசிரியர்<br>கொ/ம/கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி,<br>மருதானை<br><br>ஆர்.கமலதாஸ்<br>ஆசிரியர்<br>கே/தெஹி/ஸ்ரீ கணேசா தமிழ் மகாவித்தியாலயம்<br>(புளத்கோபிட்டிய) |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | சிவலிங்கம் குகனேஸ்வரன்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| அட்டைப்பட வடிவமைப்பு | - | ஏ.எல்.கே. சதுராணி<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் |

## அறிக்கையின் சாராம்சம்

இந்த மதிப்பீட்டு அறிக்கையானது, தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் I, II, III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடை அளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

தமிழ்மொழியும் இலக்கியமும் வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்கும் போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தரம் 10, 11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை நடைமுறையில் சாத்தியமாகும் வண்ணம் ஒழுங்கமைக்கக்கூடிய வழிகாட்டல் குறிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் வினாப்பத்திரம் I, பரீட்சார்த்திகளின் மொழிவள ஆற்றல், இலக்கண அறிவு, தகவல் தொடர்பாடல் சார்ந்த கலைச்சொற்கள், பல்வேறு துறைசார்ந்த விசேட சொற்பதங்கள், வாக்கியங்களைக் கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்தி பந்தியாக்கம் செய்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. இவ்வினாப்பத்திரத்தில் பரீட்சார்த்திகளின் இலக்கணப் பயன்பாட்டுத்திறனுக்கான அடைவு மட்டம் திருப்திகரமாகக் காணப்படவில்லை. வினாப்பத்திரம் II இல் இலக்கண அறிவு, மொழிப்பிரயோகம், கட்டுரையாக்கம், சுருக்கம் சந்தி பிரித்து எழுதுதல், இலக்கண அறிவு (எழுவாய், பயனிலைகளை இனங்காணல்), வாக்கிய அமைப்புகள், மொழியறிவு ஆகிய பகுதிகளில் போதிய அடைவு மட்டத்தை பரீட்சார்த்திகள் அடையவில்லை.

வினாப்பத்திரம் III இற்குரிய வினாக்கள் பாடநூலில் இடம்பெறும் இலக்கியப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே வினவப்படுகின்றன. இப்பகுதியில் வருகின்ற செய்யுட் பகுதிகள், புதுக்கவிதைகள், உரைநடைப்பகுதிகளில் இடம்பெறும் கதாபாத்திரங்கள், சம்பவங்கள், அணிப்பிரயோகங்கள், படைப்பாசிரியரின் நோக்கம் ஆகிய தேர்ச்சிகளுக்கான அடைவுமட்டம் பரீட்சார்த்திகளிடத்தில் திருப்திகரமாகக் காணப்படவில்லை.

## உள்ளடக்கம்

**பாகம் I** **பக்க எண்**


**1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 பாடக் குறிக்கோள்கள் 1

1.2 பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள் 2

1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 3

1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்டங்களின் அடிப்படையில் 4

1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில் 5

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 8

**பாகம் II**

**2.0 வினா உருப்படிகள், அவற்றின் விடைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வு**

**2.1 வினாப்பத்திரம் I இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9

2.1.2 வினாப்பத்திரம் I 10

2.1.3 வினாப்பத்திரம் I இன் புள்ளி வழங்கும் திட்டம் 14

2.1.4 வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 15

2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் (சதவீதத்தில்) 16

2.1.6 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வு

2.1.6.1 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 17

2.1.6.2 பாடத் தொனிப்பொருள் அடிப்படையிலான பகுப்பாய்வு 18

2.1.6.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 22

2.1.6.4 வினாப்பத்திரம் I இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 25

**2.2 வினாப்பத்திரம் II இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 26

2.2.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 26

2.2.3 வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 27

2.2.4 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 28

2.2.5 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வு

2.2.5.1 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 29

2.2.5.2 வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாக்களும், விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்பும் ஆலோசனைகளும் 30

2.2.5.3 வினாப்பத்திரம் II இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 47

**2.3 வினாப்பத்திரம் III இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

2.3.1 வினாப்பத்திரம் III இன் கட்டமைப்பு 48

2.3.2 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 48

2.3.3 வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 49

2.3.4 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 50

2.3.5 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வு 51

2.3.5.1 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வுச் சுருக்கம் 51

2.3.5.2 வினாப்பத்திரம் III இன் ஒவ்வொரு வினாக்களும், விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்பும் ஆலோசனைகளும் 52

2.3.5.3 வினாப்பத்திரம் III இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள் 72

**வரைபுகளின் பட்டியல்** **பக்க எண்**


1. வரைபு 2.1 : வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 15
2. வரைபு 2.2 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் வினாப்பத்திரம் I இன் இலகுதன்மைச்சுட்டி 18
3. வரைபு 2.3 : தொனிப்பொருளுக்கேற்ப வினாக்களின் இலகுதன்மை 19
4. வரைபு 2.4 : வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 26
5. வரைபு 2.5 : வினாப்பத்திரம் **I** இன் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 27
6. வரைபு 2.6 : வகுப்பாயிடைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு 28
7. வரைபு 2.7 : வினாப்பத்திரம் II இன் 1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் 31
8. வரைபு 2.8 : வினாப்பத்திரம் II இன் 1ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 32
9. வரைபு 2.9 : வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம் 36
10. வரைபு 2.10 : வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை 36
11. வரைபு 2.11 : வினாப்பத்திரம் II 3ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 39
12. வரைபு 2.12 : வினாப்பத்திரம் II இன் 3ஆம் வினாவின் இலகுதன்மை 39
13. வரைபு 2.13 : வினாப்பத்திரம் II இன் 4ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 41
14. வரைபு 2.14 : வினாப்பத்திரம் II இன் 4ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 42
15. வரைபு 2.15 : வினாப்பத்திரம் II இன் 5ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 45
16. வரைபு 2.16 : வினாப்பத்திரம் II இன் 5ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 45
17. வரைபு 2.17 : வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம் 48
18. வரைபு 2.18 : வினாப்பத்திரம் III இன் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச் சுட்டிகள் 49
19. வரைபு 2.19 : வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் (புள்ளிகளின் வீச்சுக்கேற்ப) 50
20. வரைபு 2.20 : வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 54
21. வரைபு 2.21 : வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை 54
22. வரைபு 2.22 : வினாப்பத்திரம் III இன் 2ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 58
23. வரைபு 2.23 : வினாப்பத்திரம் III இன் 2ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை 58
24. வரைபு 2.24 : வினாப்பத்திரம் III இன் 3ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 61
25. வரைபு 2.25 : வினாப்பத்திரம் III இன் 3ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை 61
26. வரைபு 2.26 : வினாப்பத்திரம் III இன் 4ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 64
27. வரைபு 2.27 : வினாப்பத்திரம் III இன் 4ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை 64
28. வரைபு 2.28 : வினாப்பத்திரம் III இல் 5ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 66
29. வரைபு 2.29 : வினாப்பத்திரம் III இன் 5ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 67
30. வரைபு 2.30 : வினாப்பத்திரம் III இல் 6ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 69
31. வரைபு 2.31 : வினாப்பத்திரம் III இன் 6ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 69
32. வரைபு 2.32 : வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 70
33. வரைபு 2.33 : வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை 71

## அட்டவணைகளின் பட்டியல்


பக்க எண்

1. அட்டவணை 1.1 : தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 02
2. அட்டவணை 1.2 : பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம் 03
3. அட்டவணை 1.3 : முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்ட அடிப்படையில் 04
4. அட்டவணை 1.4 : முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள்: கல்வி வலயங்கள் அடிப்படையில் 05
5. அட்டவணை 1.5 : வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம் 08
6. அட்டவணை 2.1 : புள்ளி வழங்கும் திட்டம் 14
7. அட்டவணை 2.2 : வினாத்தாள் I இன் தெரிவுகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்) 16
8. அட்டவணை 2.3 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் இலகுதன்மை கூடிய வினாக்களும் இலகுதன்மை குறைந்த வினாக்களும் 19
9. அட்டவணை 2.4 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் 40% ஐ விடக் குறைவான இலகுதன்மை கொண்ட வினாக்கள் 20

# பாகம் I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- பரீட்சை நோக்கில் மட்டுமன்றி, பெற்ற மொழியறிவினை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக் கையாளும் திறனை வளர்த்தல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், அறிவியல், தகவல் தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக பரீட்சார்த்தி தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து, ஆக்கங்களைப் படைக்கவும் மொழியைச் சிறப்பாகக் கையாளவும் சுவைக்கவும் முழு ஆற்றல் பெறுதல்.
- தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பிறரிடம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் உணர்ச்சிகளை வெளியிடவும் மொழியைக் கையாளும் திறனைப் பெற்றிருத்தல்.
- பரீட்சார்த்தீன் ஒருங்கிணைக்கப்பட்ட மொழித்திறன்களை விருத்தி செய்வதோடு, சிந்தனைத் திறனையும் மேம்படுத்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கொள்ளல்.

மூலம் : தமிழ்மொழியும் இலக்கியமும் ஆசிரியர் வழிகாட்டி தரம் 11 (2016).
தேசிய கல்வி நிறுவகம்

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

**அட்டவணை 1.1** தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழிமூலம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | | மொத்தப் பரீட்சார்த்திகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | | மொத்தம் | ஆண் | | பெண் | |
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| தமிழ் | 72,137 | 34,177 | 47.38 | 37,960 | 52.62 | 12,384 | 7,503 | 60.59 | 4,881 | 39.41 | 84,521 | 41,680 | 49.31 | 42,841 | 50.69 |

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை 2020 இல் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்கு 84,521 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர். இவர்களில் 72,137 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 12,384 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளடங்குவர். பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 47.38% ஆனோர் ஆண் பரீட்சார்த்திகளாக இருப்பினும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் இது 60.59% என்ற உயர் பெறுமானத்தைப் பெறுகின்றது. பெண் பரீட்சார்த்திகளில் அதிகமானோர் (52.62%) பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவே தோற்றியுள்ளனர்.

## 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.2** பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | | பெண் | | ஆண் | | பெண் | | | |
| | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | | % | எண்ணிக்கை | % |
| A | 3,875 | 11.34 | 9,972 | 26.27 | 107 | 1.43 | 244 | 4.98 | 14,197 | 16.79 |
| B | 4,743 | 13.88 | 8,100 | 21.34 | 275 | 3.67 | 485 | 9.94 | 13,603 | 16.09 |
| C | 11,416 | 34.40 | 12,611 | 33.22 | 1,888 | 25.16 | 1,992 | 40.81 | 27,907 | 33.02 |
| S | 8,297 | 24.28 | 5,395 | 14.21 | 2,707 | 36.08 | 1,490 | 30.53 | 17,889 | 21.17 |
| W | 5,846 | 17.11 | 1,882 | 4.96 | 2,526 | 33.67 | 691 | 13.75 | 10.925 | 12.93 |
| மொத்தம் | **34,177** | **100.00** | **37,960** | **100.00** | **7,503** | **100.00** | **4,881** | **100.00** | **84,521** | **100.00** |

**மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு 2020, இ.ப.த**

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட தரங்களைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் பெண் பரீட்சார்த்திகள் ஆண் பரீட்சார்த்திகளைக் காட்டிலும் உயர் சித்தியைப் பெற்றுள்ளனர். அதி விசேட சித்தி (A), விசேட சித்தி (B) ஆகிய தரங்களை ஆண் பரீட்சார்த்திகளை விடப் பெண் பரீட்சார்த்திகளே அதிகளவில் பெற்றுள்ளனர். தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றிய பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைவாகவுள்ள போதிலும் ஒப்பீட்டளவில் அவர்களும் உயர் சித்திகளையே பெற்றுள்ளனர். திறமைச் சித்தி (C), சாதாரண சித்தி (S), சித்தியடையாதோர் (W) ஆகியவற்றின் சதவீதங்களில் ஆண் பரீட்சார்த்திகள் முன்னிலையில் உள்ளனர்.

## 1.2.3 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் - மாவட்டங்கள் அடிப்படையில்

**அட்டவணை 1.3** முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : மாவட்ட அடிப்படையில்

| மாவட்டம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | அதி விசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3,170 | 598 | 18.86 | 589 | 18.58 | 1,012 | 31.92 | 649 | 20.47 | 2,848 | 89.84 | 322 | 10.16 |
| 2. கம்பஹா | 1,255 | 262 | 20.88 | 232 | 18.49 | 397 | 31.63 | 229 | 18.25 | 1,120 | 89.24 | 135 | 10.76 |
| 3. களுத்துறை | 1,906 | 360 | 18.89 | 292 | 15.32 | 538 | 28.23 | 396 | 20.78 | 1,586 | 83.21 | 320 | 16.79 |
| 4. கண்டி | 4,925 | 1,021 | 20.73 | 831 | 16.87 | 1,554 | 31.55 | 878 | 17.83 | 4,284 | 86.98 | 641 | 13.02 |
| 5. மாத்தளை | 1,514 | 254 | 16.78 | 252 | 16.64 | 470 | 31.04 | 296 | 19.55 | 1,272 | 84.02 | 242 | 15.98 |
| 6. நுவரெலியா | 6,435 | 1,139 | 17.70 | 1,334 | 20.73 | 2,392 | 37.17 | 1,127 | 17.51 | 5,992 | 93.12 | 443 | 6.88 |
| 7. காலி | 327 | 61 | 18.65 | 55 | 16.82 | 89 | 27.22 | 63 | 19.27 | 268 | 81.96 | 59 | 18.04 |
| 8. மாத்தறை | 423 | 73 | 17.26 | 80 | 18.91 | 130 | 30.73 | 88 | 20.80 | 371 | 87.71 | 52 | 12.29 |
| 9. அம்பாந்தோட்டை | 188 | 23 | 12.23 | 21 | 11.17 | 49 | 26.06 | 41 | 21.81 | 134 | 71.28 | 54 | 28.72 |
| 10. யாழ்ப்பாணம் | 8,564 | 2,239 | 26.14 | 1,638 | 19.13 | 2,527 | 29.51 | 1,316 | 15.37 | 7,720 | 90.14 | 844 | 9.86 |
| 11. கிளிநொச்சி | 1,648 | 310 | 18.81 | 347 | 21.06 | 607 | 36.83 | 288 | 17.48 | 1,552 | 94.17 | 96 | 5.83 |
| 12. மன்னார் | 2,239 | 390 | 17.42 | 437 | 19.52 | 806 | 36.00 | 404 | 18.04 | 2,037 | 90.98 | 202 | 9.02 |
| 13. வவுனியா | 1,568 | 290 | 18.49 | 342 | 21.81 | 550 | 35.08 | 250 | 15.94 | 1,432 | 91.33 | 136 | 8.67 |
| 14. முல்லைத்தீவு | 2,243 | 423 | 18.86 | 416 | 18.55 | 705 | 31.43 | 423 | 18.86 | 1,967 | 87.70 | 276 | 12.30 |
| 15. மட்டக்களப்பு | 7,792 | 1,654 | 21.23 | 1,418 | 18.20 | 2,481 | 31.84 | 1,383 | 17.75 | 6,936 | 89.01 | 856 | 10.99 |
| 16. அம்பாறை | 6,094 | 1,333 | 21.87 | 1,153 | 18.92 | 1,983 | 32.54 | 1,101 | 18.07 | 5,570 | 91.40 | 524 | 8.60 |
| 17. திருகோணமலை | 4,141 | 841 | 20.31 | 696 | 16.81 | 1,285 | 31.03 | 774 | 18.69 | 3,596 | 86.84 | 545 | 13.16 |
| 18. குருநாகல் | 2,207 | 601 | 27.23 | 406 | 18.40 | 601 | 27.23 | 352 | 15.95 | 1,960 | 88.81 | 247 | 11.19 |
| 19. புத்தளம் | 2,243 | 406 | 18.10 | 389 | 17.34 | 733 | 32.68 | 422 | 18.81 | 1,950 | 86.94 | 293 | 13.06 |
| 20. அனுராதபுரம் | 1,164 | 279 | 23.97 | 206 | 17.70 | 358 | 30.76 | 187 | 16.07 | 1,030 | 88.49 | 134 | 11.51 |
| 21. பொலன்னறுவை | 517 | 97 | 18.76 | 84 | 16.25 | 170 | 32.88 | 106 | 20.50 | 457 | 88.39 | 60 | 11.61 |
| 22. பதுளை | 3,101 | 443 | 14.29 | 604 | 19.48 | 1,111 | 35.83 | 652 | 21.03 | 2,810 | 90.62 | 291 | 9.38 |
| 23. மொனராகலை | 262 | 42 | 16.03 | 51 | 19.47 | 76 | 29.01 | 63 | 24.05 | 232 | 88.55 | 30 | 11.45 |
| 24. இரத்தினபுரி | 1,601 | 243 | 15.18 | 269 | 16.80 | 540 | 33.73 | 343 | 21.42 | 1,395 | 87.13 | 206 | 12.87 |
| 25. கேகாலை | 1,990 | 406 | 20.40 | 359 | 18.04 | 614 | 30.85 | 339 | 17.04 | 1,718 | 86.33 | 272 | 13.67 |
| **மொத்தம்** | **67,517** | **13,788** | **20.42** | **12,501** | **18.52** | **21,778** | **32.26** | **12,170** | **18.03** | **60,237** | **89.22** | **7,280** | **10.78** |

**மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு 2020, இ.ப.த**

## 1.2.4 முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் : கல்வி வலயங்கள் அடிப்படையில்

**அட்டவணை 1.4 :** முதல் முறையாக தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள்: கல்வி வலயங்கள் அடிப்படையில்

| கல்வி வலயம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | அதி விசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2,858 | 558 | 19.52 | 534 | 18.68 | 908 | 31.77 | 582 | 20.36 | 2,582 | 90.34 | 276 | 9.66 |
| 2. ஹோமாகம | 134 | 9 | 6.72 | 19 | 14.18 | 37 | 27.61 | 37 | 27.61 | 102 | 76.12 | 32 | 23.88 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 32 | 1 | 3.13 | 9 | 28.13 | 14 | 43.75 | 8 | 25.00 | 32 | 100.00 | 0 | 0.00 |
| 4. பிலியந்தல | 146 | 30 | 20.55 | 27 | 18.49 | 53 | 36.30 | 22 | 15.07 | 132 | 90.41 | 14 | 9.59 |
| 5. கம்பஹா | 352 | 63 | 17.90 | 62 | 17.61 | 107 | 30.40 | 64 | 18.18 | 296 | 84.09 | 56 | 15.91 |
| 6 மினுவாங்கொட | 210 | 63 | 30.00 | 47 | 22.38 | 51 | 24.29 | 25 | 11.90 | 186 | 88.57 | 24 | 11.43 |
| 7. நீர்கொழும்பு | 304 | 74 | 24.34 | 55 | 18.09 | 97 | 31.91 | 47 | 15.46 | 273 | 89.80 | 31 | 10.20 |
| 8. களனி | 389 | 62 | 15.94 | 68 | 17.48 | 142 | 36.50 | 93 | 23.91 | 365 | 93.83 | 24 | 6.17 |
| 9. களுத்துறை | 1,366 | 297 | 21.74 | 223 | 16.33 | 415 | 30.38 | 260 | 19.03 | 1,195 | 87.48 | 171 | 12.52 |
| 10. மத்துகம | 194 | 21 | 10.82 | 22 | 11.34 | 53 | 27.32 | 49 | 25.26 | 145 | 74.74 | 49 | 25.26 |
| 11. ஹொரணை | 346 | 42 | 12.14 | 47 | 13.58 | 70 | 20.23 | 87 | 25.14 | 246 | 71.10 | 100 | 28.90 |
| 12. கண்டி | 1,014 | 241 | 23.77 | 184 | 18.15 | 300 | 29.59 | 191 | 18.84 | 916 | 90.34 | 98 | 9.66 |
| 13. தேனுவர | 610 | 188 | 30.82 | 102 | 16.72 | 172 | 28.20 | 75 | 12.30 | 537 | 88.03 | 73 | 11.97 |
| 14. கம்பளை | 1,332 | 237 | 17.79 | 229 | 17.19 | 456 | 34.23 | 257 | 19.29 | 1,179 | 88.51 | 153 | 11.49 |
| 15. தெல்தெனியா | 202 | 24 | 11.88 | 40 | 19.80 | 79 | 39.11 | 35 | 17.33 | 178 | 88.12 | 24 | 11.88 |
| 16. வத்தேகம | 880 | 154 | 17.50 | 150 | 17.05 | 285 | 32.39 | 148 | 16.82 | 737 | 83.75 | 143 | 16.25 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 887 | 177 | 19.95 | 126 | 14.21 | 262 | 29.54 | 172 | 19.39 | 737 | 83.09 | 150 | 16.91 |
| 18. மாத்தளை | 1,246 | 196 | 15.73 | 202 | 16.21 | 396 | 31.78 | 246 | 19.74 | 1,040 | 83.47 | 206 | 16.53 |
| 19. கலேவெல | 224 | 53 | 23.66 | 45 | 20.09 | 55 | 24.55 | 40 | 17.86 | 193 | 86.16 | 31 | 13.84 |
| 20. நாஉல | 44 | 5 | 11.36 | 5 | 11.36 | 19 | 43.18 | 10 | 22.73 | 39 | 88.64 | 5 | 11.36 |
| 21. வில்கமுவ | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 22. நுவரெலியா | 2,550 | 462 | 18.12 | 549 | 21.53 | 934 | 36.63 | 443 | 17.37 | 2,388 | 93.65 | 162 | 6.35 |
| 23. கொத்மலை | 598 | 89 | 14.88 | 101 | 16.89 | 244 | 40.80 | 108 | 18.06 | 542 | 90.64 | 56 | 9.36 |
| 24. ஹட்டன் | 2,577 | 469 | 18.20 | 521 | 20.22 | 952 | 36.94 | 457 | 17.73 | 2,399 | 93.09 | 178 | 6.91 |
| 25. வலப்பனை | 565 | 104 | 18.41 | 128 | 22.65 | 216 | 38.23 | 95 | 16.81 | 543 | 96.11 | 22 | 3.89 |
| 26. ஹங்குரன்கெத்த | 145 | 15 | 10.34 | 35 | 24.14 | 46 | 31.72 | 24 | 16.55 | 120 | 82.76 | 25 | 17.24 |
| 27. காலி | 237 | 42 | 17.72 | 36 | 15.19 | 60 | 25.32 | 50 | 21.10 | 188 | 79.32 | 49 | 20.68 |
| 28. எல்பிட்டிய | 45 | 4 | 8.89 | 8 | 17.78 | 13 | 28.89 | 13 | 28.89 | 38 | 84.44 | 7 | 15.56 |
| 29. அம்பலாங்கொடை | 14 | 7 | 50.00 | 1 | 7.14 | 4 | 28.57 | 0 | 0.00 | 12 | 85.71 | 2 | 14.29 |
| 30. உடுகம | 31 | 8 | 25.81 | 10 | 32.26 | 12 | 38.71 | 0 | 0.00 | 30 | 96.77 | 1 | 3.23 |
| 31. மாத்தறை | 187 | 49 | 26.20 | 40 | 21.39 | 54 | 28.88 | 31 | 16.58 | 174 | 93.05 | 13 | 6.95 |
| 32. அக்குரஸ்ஸ | 109 | 19 | 17.43 | 23 | 21.10 | 27 | 24.77 | 29 | 26.61 | 98 | 89.91 | 11 | 10.09 |
| 33. முலடியன-ஹக்மன | 28 | 3 | 10.71 | 5 | 17.86 | 11 | 39.29 | 5 | 17.86 | 24 | 85.71 | 4 | 14.29 |
| 34. தெனியாய | 99 | 2 | 2.02 | 12 | 12.12 | 38 | 38.38 | 23 | 23.23 | 75 | 75.76 | 24 | 24.24 |

| கல்வி வலயம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | அதி விசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்காலை | 7 | 1 | 14.29 | 0 | 0.00 | 1 | 14.29 | 2 | 28.57 | 4 | 57.14 | 3 | 42.86 |
| 36. அம்பாந்தோட்டை | 166 | 21 | 12.65 | 20 | 12.05 | 44 | 26.51 | 35 | 21.08 | 120 | 72.29 | 46 | 27.71 |
| 37. வலஸ்முல்லை | 15 | 1 | 6.67 | 1 | 6.67 | 4 | 26.67 | 4 | 26.67 | 10 | 66.67 | 5 | 33.33 |
| 38. யாழ்ப்பாணம் | 3,137 | 928 | 29.58 | 631 | 20.11 | 907 | 28.91 | 431 | 13.74 | 2,897 | 92.35 | 240 | 7.65 |
| 39. தீவகம் | 604 | 43 | 7.12 | 83 | 13.74 | 199 | 32.95 | 154 | 25.50 | 479 | 79.30 | 125 | 20.70 |
| 40. தென்மராட்சி | 853 | 209 | 24.50 | 144 | 16.88 | 271 | 31.77 | 140 | 16.41 | 764 | 89.57 | 89 | 10.43 |
| 41. வலிகாமம் | 2,460 | 598 | 24.31 | 474 | 19.27 | 743 | 30.20 | 390 | 15.85 | 2,205 | 89.63 | 255 | 10.37 |
| 42. வடமராட்சி | 1,510 | 461 | 30.53 | 306 | 20.26 | 407 | 26.95 | 201 | 13.31 | 1,375 | 91.06 | 135 | 8.94 |
| 43. கிளிநொச்சி தெற்கு | 2,462 | 470 | 19.09 | 462 | 18.77 | 834 | 33.87 | 447 | 18.16 | 2,213 | 89.89 | 249 | 10.11 |
| 43. கிளிநொச்சி வடக்கு | 1,453 | 280 | 19.27 | 295 | 20.30 | 469 | 32.28 | 255 | 17.55 | 1,299 | 89.40 | 154 | 10.60 |
| 44. மன்னார் | 1,203 | 244 | 20.28 | 250 | 20.78 | 423 | 35.16 | 211 | 17.54 | 1,128 | 93.77 | 75 | 6.23 |
| 45. மடு | 377 | 52 | 13.79 | 83 | 22.02 | 162 | 42.97 | 60 | 15.92 | 357 | 94.69 | 20 | 5.31 |
| 46. வவுனியா - தெற்கு | 462 | 49 | 10.61 | 75 | 16.23 | 164 | 35.50 | 113 | 24.46 | 401 | 86.80 | 61 | 13.20 |
| 47. வவுனியா - வடக்கு | 116 | 17 | 14.66 | 22 | 18.97 | 46 | 39.66 | 15 | 12.93 | 100 | 86.21 | 16 | 13.79 |
| 48. முல்லைத்தீவு | 1,055 | 242 | 22.94 | 236 | 22.37 | 364 | 34.50 | 140 | 13.27 | 982 | 93.08 | 73 | 6.92 |
| 49. துணுக்காய் | 513 | 48 | 9.36 | 106 | 20.66 | 186 | 36.26 | 110 | 21.44 | 450 | 87.72 | 63 | 12.28 |
| 50. மட்டக்களப்பு | 1,937 | 521 | 26.90 | 378 | 19.51 | 588 | 30.36 | 291 | 15.02 | 1,778 | 91.79 | 159 | 8.21 |
| 51. கல்குடா | 1,383 | 199 | 14.39 | 232 | 16.78 | 520 | 37.60 | 285 | 20.61 | 1,236 | 89.37 | 147 | 10.63 |
| 52. பட்டிருப்பு | 1,429 | 269 | 18.82 | 247 | 17.28 | 434 | 30.37 | 260 | 18.19 | 1,210 | 84.67 | 219 | 15.33 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 2,176 | 556 | 25.55 | 412 | 18.93 | 645 | 29.64 | 362 | 16.64 | 1,975 | 90.76 | 201 | 9.24 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 867 | 109 | 12.57 | 149 | 17.19 | 294 | 33.91 | 185 | 21.34 | 737 | 85.01 | 130 | 14.99 |
| 55. அம்பாறை | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 56. கல்முனை | 2,330 | 574 | 24.64 | 429 | 18.41 | 705 | 30.26 | 413 | 17.73 | 2,121 | 91.03 | 209 | 8.97 |
| 57. சம்மாந்துறை | 1,369 | 243 | 17.75 | 233 | 17.02 | 470 | 34.33 | 257 | 18.77 | 1,203 | 87.87 | 166 | 12.13 |
| -58. மஹாஓய | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 59. தெஹியத்தகண்டிய | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 60. அக்கரைப்பற்று | 1,621 | 416 | 25.66 | 315 | 19.43 | 527 | 32.51 | 275 | 16.96 | 1,533 | 94.57 | 88 | 5.43 |
| 61. திருக்கோவில் | 774 | 100 | 12.92 | 176 | 22.74 | 281 | 36.30 | 156 | 20.16 | 713 | 92.12 | 61 | 7.88 |
| 62. திருகோணமலை | 1,776 | 429 | 24.16 | 322 | 18.13 | 524 | 29.50 | 310 | 17.45 | 1,585 | 89.25 | 191 | 10.75 |
| 63. மூதூர் | 991 | 204 | 20.59 | 163 | 16.45 | 340 | 34.31 | 184 | 18.57 | 891 | 89.91 | 100 | 10.09 |
| 64. கந்தளாய் | 136 | 31 | 22.79 | 22 | 16.18 | 38 | 27.94 | 27 | 19.85 | 118 | 86.76 | 18 | 13.24 |
| 65. கிண்ணியா | 1,212 | 173 | 14.27 | 187 | 15.43 | 374 | 30.86 | 249 | 20.54 | 983 | 81.11 | 229 | 18.89 |
| 66. திருகோணமலை வடக்கு | 15 | 1 | 6.67 | 1 | 6.67 | 7 | 46.67 | 1 | 6.67 | 10 | 66.67 | 5 | 33.33 |
| 67. குருநாகல் | 465 | 86 | 18.49 | 72 | 15.48 | 138 | 29.68 | 81 | 17.42 | 377 | 81.08 | 88 | 18.92 |
| 68. குளியாப்பிட்டிய | 311 | 101 | 32.48 | 58 | 18.65 | 79 | 25.40 | 38 | 12.22 | 276 | 88.75 | 35 | 11.25 |
| 69 நிக்கவெரட்டிய | 247 | 70 | 28.34 | 66 | 26.72 | 63 | 25.51 | 32 | 12.96 | 231 | 93.52 | 16 | 6.48 |
| 70. மாகோ | 186 | 45 | 24.19 | 29 | 15.59 | 56 | 30.11 | 34 | 18.28 | 164 | 88.17 | 22 | 11.83 |
| 71. கிரியுள்ள | 671 | 207 | 30.85 | 125 | 18.63 | 177 | 26.38 | 106 | 15.80 | 615 | 91.65 | 56 | 8.35 |
| 72. இப்பாகமுவ | 327 | 92 | 28.13 | 56 | 17.13 | 88 | 26.91 | 61 | 18.65 | 297 | 90.83 | 30 | 9.17 |
| 73. புத்தளம் | 2,042 | 374 | 18.32 | 365 | 17.87 | 677 | 33.15 | 382 | 18.71 | 1,798 | 88.05 | 244 | 11.95 |
| 74 சிலாபம் | 269 | 46 | 17.10 | 38 | 14.13 | 78 | 29.00 | 57 | 21.19 | 219 | 81.41 | 50 | 18.59 |
| 75. அனுராதபுரம் | 310 | 73 | 23.55 | 45 | 14.52 | 84 | 27.10 | 58 | 18.71 | 260 | 83.87 | 50 | 16.13 |
| 76. தபுத்தேகம் | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 77. கெக்கிராவை | 471 | 125 | 26.54 | 71 | 15.07 | 153 | 32.48 | 69 | 14.65 | 418 | 88.75 | 53 | 11.25 |

| கல்வி வலயம் | தோற்றியவர்களின் எண்ணிக்கை | அதி விசேட சித்தி (A) பெற்றவர் | | விசேட சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி அடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 78. கலென்பிந்துனுவெவ | 171 | 33 | 19.30 | 43 | 25.15 | 52 | 30.41 | 25 | 14.62 | 153 | 89.47 | 18 | 10.53 |
| 79. கெப்பித்திகொல்லேவ | 212 | 48 | 22.64 | 47 | 22.17 | 69 | 32.55 | 35 | 16.51 | 199 | 93.87 | 13 | 6.13 |
| 80. பொலன்னறுவ | 383 | 81 | 21.15 | 68 | 17.75 | 118 | 30.81 | 72 | 18.80 | 339 | 88.51 | 44 | 11.49 |
| 81. ஹிங்குரக்கொடை | 21 | 4 | 19.05 | 3 | 14.29 | 9 | 42.86 | 3 | 14.29 | 19 | 90.48 | 2 | 9.52 |
| 82. திம்புலாகல | 113 | 12 | 10.62 | 13 | 11.50 | 43 | 38.05 | 31 | 27.43 | 99 | 87.61 | 14 | 12.39 |
| 83. பதுளை | 823 | 148 | 17.98 | 169 | 20.53 | 288 | 34.99 | 159 | 19.32 | 764 | 92.83 | 59 | 7.17 |
| 84. பண்டாரவளை | 1,037 | 139 | 13.40 | 218 | 21.02 | 370 | 35.68 | 223 | 21.50 | 950 | 91.61 | 87 | 8.39 |
| 85. மஹியங்கனை | 12 | 0 | 0.00 | 1 | 8.33 | 4 | 33.33 | 2 | 16.67 | 7 | 58.33 | 5 | 41.67 |
| 86. வெலிமடை | 556 | 76 | 13.67 | 97 | 17.45 | 201 | 36.15 | 122 | 21.94 | 496 | 89.21 | 60 | 10.79 |
| 87. பசறை | 589 | 72 | 12.22 | 104 | 17.66 | 215 | 36.50 | 121 | 20.54 | 512 | 86.93 | 77 | 13.07 |
| 88. வியலுவ | 84 | 8 | 9.52 | 15 | 17.86 | 33 | 39.29 | 25 | 29.76 | 81 | 96.43 | 3 | 3.57 |
| 89. மொனராகலை | 147 | 14 | 9.52 | 25 | 17.01 | 50 | 34.01 | 43 | 29.25 | 132 | 89.80 | 15 | 10.20 |
| 90. வெல்லவாய | 6 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 33.33 | 1 | 16.67 | 3 | 50.00 | 3 | 50.00 |
| 91. பிபிலை | 109 | 28 | 25.69 | 26 | 23.85 | 24 | 22.02 | 19 | 17.43 | 97 | 88.99 | 12 | 11.01 |
| 92. தனமல்வில | - | 0 | | 0 | | 0 | | 0 | | - | | 0 | |
| 93. இரத்தினபுரி | 613 | 101 | 16.48 | 89 | 14.52 | 225 | 36.70 | 121 | 19.74 | 536 | 87.44 | 77 | 12.56 |
| 94. பலாங்கொடை | 423 | 70 | 16.55 | 80 | 18.91 | 153 | 36.17 | 85 | 20.09 | 388 | 91.73 | 35 | 8.27 |
| 95. நிவித்திகல | 244 | 14 | 5.74 | 26 | 10.66 | 59 | 24.18 | 74 | 30.33 | 173 | 70.90 | 71 | 29.10 |
| 96. எம்பிலிபிடிய | 321 | 58 | 18.07 | 74 | 23.05 | 103 | 32.09 | 63 | 19.63 | 298 | 92.83 | 23 | 7.17 |
| 97. கேகாலை | 194 | 35 | 18.04 | 30 | 15.46 | 55 | 28.35 | 38 | 19.59 | 158 | 81.44 | 36 | 18.56 |
| 98. மாவனல்லை | 966 | 248 | 25.67 | 202 | 20.91 | 298 | 30.85 | 130 | 13.46 | 878 | 90.89 | 88 | 9.11 |
| 99. தெஹியோவிட்ட | 830 | 123 | 14.82 | 127 | 15.30 | 261 | 31.45 | 171 | 20.60 | 682 | 82.17 | 148 | 17.83 |
| மொத்தம் | 67,517 | 13,788 | 20.42 | 11,967 | 18.68 | 21,778 | 32.26 | 12,170 | 18.03 | 60,237 | 89.22 | 7,280 | 10.78 |

**மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு 2020, இ.ப.தி**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

**அட்டவணை 1.5** வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 75 | 0.09 | 84,521 | 100.00 |
| 81 - 90 | 3,221 | 3.81 | 84,446 | 99.91 |
| 71 - 80 | 9,686 | 11.46 | 81,225 | 96.10 |
| 61 - 70 | 13,375 | 15.82 | 71,539 | 84.64 |
| 51 - 60 | 15,092 | 17.86 | 58,164 | 68.82 |
| 41 - 50 | 15,828 | 18.73 | 43,072 | 50.96 |
| 31 - 40 | 13,324 | 15.76 | 27,244 | 32.23 |
| 21 - 30 | 8,332 | 9.86 | 13,920 | 16.47 |
| 11 - 20 | 4,264 | 5.04 | 5,588 | 6.61 |
| 01 - 10 | 1,322 | 1.56 | 1,324 | 1.57 |
| 00 - 00 | 2 | 0.00 | 2 | 0.00 |

**மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு 2020, இ.ப.தி**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது. உதாரணமாக 31 - 40 என்ற வகுப்பாயிடையைக் கருதுவோம்.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்திற்குத் தோற்றிய 84,521 பரீட்சார்த்திகளில் 31-40 வகுப்பாயிடையில் 13, 324 பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது மொத்தப் பரீட்சார்த்திகளின் 15.76% ஆகும். மேலும் 40 புள்ளிகள் அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 27, 244 ஆகும். அதாவது தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளுள் 32.23% ஆனோர் 40 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

## பாகம் II

### 2.0 வினா உருப்படிகள், அவற்றின் விடைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வு

வினாத்தாளின் தன்மை

க.பொ.த.(சாதர.தரப்) பரீட்சையின் (22) தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் பரீட்சார்த்தி அடைவை மதிப்பிடுவதற்காக மூன்று வினாப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகிய இரண்டும் பரீட்சார்த்திகளுக்கு ஒரே தடவையில் வழங்கப்படுவதோடு அவ் இரண்டு வினாப்பத்திரங்களுக்குமாக ஒதுக்கப்பட்ட காலப்பகுதி 3 மணித்தியாலமாகும். தமிழ் இலக்கியத் திறனை மதிப்பிடுவதற்காக வழங்கப்படும் வினாப்பத்திரம் III இற்கு ஒதுக்கப்படும் காலம் 2 மணித்தியாலமாகும்.

இறுதிப் புள்ளிகளைக் கணித்தல்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | - | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - | 80 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் III | - | 80 புள்ளிகள் |
| மொத்தம் | - | 200 புள்ளிகள் |
| இறுதிப்புள்ளி | = | 200 ÷ 2 = 100 |

### 2.1 வினாப்பத்திரம் I இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

- **நேரம் :- 1 மணித்தியாலம்** **மொத்தம் :- 40 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் நான்கு விடைகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியானதை அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.
- இவ்வினாக்கள் பெரும்பாலும் மொழிவளம், இலக்கணத்திறன், நடைமுறைப் பிரயோகம், வாக்கிய அமைப்பு, கிரகித்தல், பந்தியாக்கம் போன்ற திறன்களை மதிப்பிடுவனவாக அமைகின்றன.

**மூலம் : க.பொ.த. (சா.தர) வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு மற்றும் முன்னோடி வினாக்கள், 2016, இ.ப.தி**

## 2.1.2 வினாப்பத்திரம் I

- **தடித்த எழுத்தில்** அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'நித்திலப் புன்னகைச் சுடர் வீசிட......' - இங்கு **நித்திலம்** என்பது
(1) நிலம் (2) மல்லிகை (3) பவளம் (4) முத்து

**2.** 'தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகும்' - இங்கு **திரை** என்பது
(1) அலை (2) மறைப்பு (3) நீர் (4) ஆடை

**3.** 'மஞ்சோனா மரம் மிக அடர்த்தியாய் காற்றுக்குத் தலைவிரித்தாடி ஒய்யாரமாய் நின்றது.' - **அடர்த்தி** என்பதன் எதிர்க்கருத்து
(1) நெருக்கம் (2) ஐது (3) செறிவு (4) நொய்து

**4.** 'சிறுமீன் சினையினும் நுண்ணிதே' - **நுண்மை** என்பதன் எதிர்க்கருத்து
(1) அருமை (2) பருமை (3) சிறுமை (4) வெறுமை

**5.** 'என் மிதமிஞ்சிய பயந்தாங்கொள்ளிப் பட்டத்தை நான் எரித்தாயிற்று' - இங்கு **மிதமிஞ்சிய** என்பதன் பொருள்
(1) அளவுக்கதிகமான (2) மிகப்பெரிய
(3) மிக மோசமான (4) சரியளவான

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**6.** பின்வருவனவற்றுள் **தொடர்பற்ற** சொற்களின் இணைப்பு
(1) பிரபுக்கள் - குருமார் (2) நீதிபதி - வழக்கறிஞர்
(3) ஆசிரியர் - மாணவர் (4) பெற்றோர் - பிள்ளைகள்

**7.** பொருளால் **வேறுபட்ட** சொற்களைக் கொண்ட தொகுதி
(1) ஞாயிறு, பகலவன், ஆதவன் (2) துயில், உறக்கம், துஞ்சல்
(3) கங்குல், பகல், மதியம் (4) தாரகை, உடு, விண்மீன்

**8.** **மாருதம், பவனம், வளி** என்னும் சொற்கள் குறிக்கும் பொருள்
(1) நிலம் (2) நீர் (3) காற்று (4) நெருப்பு

**9.** 'வெப்சைற்' (Website) என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) இணையம் (2) வலைத்தளம் (3) மின்னஞ்சல் (4) முகநூல்

**10.** இளமை குறித்த 'பிள்ளை' என்ற மரபுப் பெயருக்குப் **பொருத்தமற்றது**
(1) கீரி (2) தென்னை (3) பனை (4) கமுகு

**11.** 'அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்.' - இங்கு **பரணி** என்பது
(1) புகழ் (2) மெய்க்கீர்த்தி
(3) வம்சாவளி (4) சாசனம்

**12.** எதிர்ப்பொருள் தரும் சொற்களால் அமைந்த இணைமொழி
(1) அரைகுறை (2) ஆதியந்தம் (3) ஆடிப்பாடி (4) அக்கம்பக்கம்

**13.** துன்பங்களைப் பொருட்படுத்தாது, எடுத்த காரியத்தை முடிப்பதற்கு மேற்கொள்ளும் தீவிர முயற்சியை விசேடிப்பதற்கு அடைமொழியாகக் கையாளத்தக்க அருஞ்சொற்றொடர்
(1) அகமும் முகமும் மலர்ந்து (2) அருமை பெருமை அறிந்து
(3) ஊண் உறக்கம் இன்றி (4) நன்மை தீமை நாடி

**14.** அரிச்சுவடியில் உள்ள எழுத்துமுறைப்படி சொற்களை நிரற்படுத்தி, சொற்களின் பொருளைத் தரும் நூல்
(1) நிகண்டு (2) கலைக்களஞ்சியம்
(3) சொற்றொகுதி (4) அகராதி

**15.** கூறவந்த விடயத்தோடு **தொடர்பில்லாத** விடயங்களைக் கூறுதல்
(1) குன்றக்கூறல் (2) மற்றொன்று விரித்தல்
(3) கூறியது கூறல் (4) மிகைபடக் கூறல்

**16.** 'அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?' என்ற பழமொழிக்கு மிக நெருக்கமான பிறிதொரு பழமொழி
(1) ஆறிலும் சாவு நூறிலும் சாவு (2) தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
(3) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து (4) நாய்வாலை நிமிர்த்த முடியாது

**17.** 'தகுதியற்றவர்களிடம் சேரும் அரும்பொருள் அழிவுக்குள்ளாகும்' என்பதை வலியுறுத்தும் உவமைத் தொடர்
(1) ஆடத் தெரியாதவன் முற்றம் கோணல் என்றது போல
(2) ஆற்றிற் கரைத்த புளி போல
(3) குரங்கின் கைப் பூமாலை போல
(4) காட்டில் எறித்த நிலாப் போல

**18.** 'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி' என்ற தொடரால் உணர்த்தப்படுவன
(1) செழிப்பும் நிலைபேறும் (2) பசுமையும் இளமையும்
(3) அழகும் இளமையும் (4) உயரமும் ஆழமும்

**19.** 'அழகான நடைவண்டி அசைந்தாடும் கிலுகிலுப்பை' - கிலுகிலுப்பை என்ற சொல்லில் உள்ள **கிலுகிலு** என்பது
(1) இணைமொழி (2) அடுக்குத்தொடர்
(3) இரட்டைக்கிளவி (4) அடுக்கிடுக்குத்தொடர்

**20.** 'நாத் தோம் இல் உரை பதற கதும் என உற்றெழுந்து' - இத்தொடரில் இடம்பெற்றுள்ள விரைவுப் பொருள் தரும் ஒலிக்குறிப்புச் சொல்
(1) தோம் (2) கதும் (3) பதற (4) உற்று

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **மிகச் சரியான** விடையைத் தெரிவுசெய்க.

**21.** ககரம் 'h' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கும் சொல்
(1) கடல் (2) ஆக்கம் (3) மங்கை (4) ஆகம்

**22.** பின்வருவனவற்றுள் இடைநிலை பெற்றமைந்த பெயர்ப் பகுபதம்
(1) உண்டான் (2) பொங்கும் (3) அறிஞன் (4) அரசன்

**23.** பின்வருவனவற்றுள் பெயரடை
(1) குறைவாக (2) இனிமையான (3) விரைந்து (4) விரைவில்

**24.** பின்வருவனவற்றுள் வேற்றுமைப் பொருளால் வேறுபடும் தொடர்
(1) வான்மதி (2) உச்சித்திலகம்
(3) மணிக்கோபுரம் (4) சுவர்க்கடிகாரம்

**25.** கெடுதல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்தது
(1) ஊர்ப்பெயர் (2) மரவேர் (3) நிலாமுற்றம் (4) மலரிதழ்

**26.** அவன் நீதியுணர்வு உள்ளவன்.
அவன் தவறு செய்யமாட்டான்.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் தர்க்கரீதியாக இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) ஆனால் (2) ஆகையால் (3) ஆயினும் (4) எனினும்

**27.** 'காகம்போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம் கரைந்து திரிவானோ?'
இங்கு **விழுந்தவள்** என்பது
(1) படர்க்கை வினைமுற்று (2) தொழிற்பெயர்
(3) வினையாலணையும் பெயர் (4) பெண்பால் வினைமுற்று

**28.** அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) கள்ளம், கபடம், காடு, குரங்கு (2) வரம்பு, வயல், வாசல், வீடு
(3) தப்பட்டை, தப்பு, தாளம், தாரை (4) ஏகம், ஏகாந்தம், ஏகுதல், ஏங்குதல்

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) வேற்றுமைத்தொகை : மரச்சட்டம், மரவேர், கண்ணீர்
(2) வினைத்தொகை : ஆடுகதிரை, பாடுபொருள், காடுகரம்பை
(3) பண்புத்தொகை : முழுநிலவு, நீண்டபயணம், பழங்குடை
(4) உவமைத்தொகை : தேன்மொழி, மலர்முகம், நெருப்புப்பசி

**30.** (1) தன்மைவினை : வந்தேன், சென்றோம், பார்ப்பேன்
(2) முன்னிலைவினை : செய்வாய், ஓடுங்கள், ஒழிவாய்
(3) படர்க்கைவினை : ஆடுகிறான், ஓடுவான், படித்தான்
(4) வியங்கோள்வினை : வெல்க, ஒழியட்டும், செல்வாய்

● புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**31.** மாணவர்கள், நாடகத்துறையில் அனுபவ அறிவினைப் பெறுவதற்காக ..................... ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(1) கருத்தரங்கு (2) விரிவுரை (3) செயலமர்வு (4) கலந்துரையாடல்

**32.** 'கலைந்து, அலைந்து, உலைந்து' என ..................... அமைந்த சொற்களைக் கவிஞன் தொடுத்தான்.

(1) மோனை (2) எதுகை (3) சிலேடை (4) முரண்

**33.** பிரபுக்களைப் புகழ்ந்து புலவர்கள் பாடிய பாடல்களிற் பெரும்பாலானவை வெறும் ..................... என்றே கொள்ளத்தக்கன.

(1) கீர்த்தனைகள் (2) மெய்க்கீர்த்திகள் (3) சிற்றிலக்கியங்கள் (4) புனைந்துரைகள்

**34.** "பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படவுள்ள, இந்த ஆண்டுக்கான ..................... ஏழை மக்களுக்குச் சார்பானதாக அமையும்" என்று நிதியமைச்சர் கூறினார்.

(1) பிரேரணை (2) பாதீடு (3) முன்மொழிவு (4) அறிக்கை

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் **பொருத்தமான** முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

**35.** உழைக்கும் கரங்கள் உன்னதமானவை என்ற உண்மை ..................................................

(1) உணரப்படவேண்டியன (2) உணரத்தக்கவை
(3) உணரத்தக்கன (4) உணரப்படவேண்டியது

**36.** உயர்தரத்திற் பயில்வதற்கு எங்களிற் பெரும்பாலானவர்கள் கணிதத்துறையையும் சிலர் விஞ்ஞானத்துறையையும் நான் கலைத்துறையையும் ..................................................

(1) தெரிவுசெய்தனர் (2) தெரிவுசெய்தோம்
(3) தெரிவுசெய்தார்கள் (4) தெரிவுசெய்தேன்

● கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

கோவிலில் மணிகள் ஆர்ப்ப
குயிலினம் வரவு கூற
சேவல்கள் சிறகு கொட்டிச்
செகத்தினை விழிக்கச் செய்ய
பாவியர் உள்ளம் போலும்
கங்குலும் பதுங்கிக் கொள்ள
தேவர்க்கும் தேவனான
பகலவன் தேரில் வந்தான்

**37.** இப்பாடல் விவரிக்கும் பிரதான விடயம் யாது?
(1) பகற்பொழுது (2) உலகம் விழிப்படைதல்
(3) சூரியோதயம் (4) காலை நிகழ்ச்சிகள்

**38.** 'செகத்தினை விழிக்கச்செய்ய' என்ற தொடரில் 'செகம்' என்ற சொல்லால் உணர்த்தப்படுவது
(1) வானம் (2) உயிரினம் (3) இரவு (4) பொழுது

**39.** இங்கு கையாளப்பட்டுள்ள உவமையணியின் உவமான உவமேயங்களுக்கு இடையிலான பொதுத்தன்மை யாது?
(1) இருள் (2) ஒளி (3) அழகு (4) செம்மை

**40.** கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ - எனினும் அவர் கண்ட கனவுகள் இன்னும் நனவாகவில்லை.
ஆ - சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார்.
இ - அந்த ஏற்றத்தாழ்வுகளும் மூடத்தனங்களும் இன்று அகன்றுவிட்டனவா?
ஈ - மூடத்தனங்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார்.
உ - மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன.

(1) உ, இ, ஈ, அ, ஆ (2) உ, ஈ, ஆ, அ, இ
(3) உ, அ, ஆ, ஈ, இ (4) உ, அ, ஈ, ஆ, இ

**

Department of Examinations - Sri Lanka

### 2.1.3 வினாப்பத்திரம் I இன் புள்ளி வழங்கும் திட்டம்

அட்டவணை 2.1 புள்ளி வழங்கும் திட்டம்


| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 4 | 21 | 4 |
| 02 | 1 | 22 | 3 |
| 03 | 2 | 23 | 2 |
| 04 | 2 | 24 | 3 |
| 05 | 1 | 25 | 2 |
| 06 | 1 | 26 | 2 |
| 07 | 3 | 27 | 3 |
| 08 | 3 | 28 | 4 |
| 09 | 2 | 29 | 2 |
| 10 | 3 | 30 | 4 |
| 11 | 1 | 31 | 3 |
| 12 | 2 | 32 | 2 |
| 13 | 3 | 33 | 4 |
| 14 | 4 | 34 | 2 |
| 15 | 2 | 35 | 4 |
| 16 | 2 | 36 | 2 |
| 17 | 3 | 37 | 3 |
| 18 | 1 | 38 | 2 |
| 19 | 3 | 39 | 1 |
| 20 | 2 | 40 | 3 |

**ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்**

மூலம் : க.பொ.த (சா.தர)ப் பரீட்சை புள்ளி வழங்கும் திட்டம் - 2020

### 2.1.4 வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள்

வரைபு 2.1 வினாப்பத்திரம் I இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள்




**மூலம்:** (RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.தி).

மேலுள்ள வரைபின்படி அதிகளவான பரீட்சார்த்திகள் 26 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்துள்ளனர். 26 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்தோர் 81% ஆகும். எனவே, இதன் இலகுதன்மைச்சுட்டி 0.81 ஆகும். அதேபோல, மிகக்குறைவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ள வினா இலக்கங்கள் 24, 31 என்பன ஆகும். இவ்வினாக்களுக்கு 22% ஆனோர் மாத்திரமே சரியாக விடையளித்துள்ளனர். எனவே, இதன் இலகுதன்மைச்சுட்டி 0.22 ஆகும். இதற்கேற்ப 24, 31 ஆம் வினாக்கள் இலகுதன்மை குறைந்ததாகவும் 26 ஆம் வினா இலகுதன்மை கூடியதாகவும் காணப்படுகின்றன.

## 2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)

அட்டவணை 2.2 **வினாத்தாள் I இன் தெரிவுகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | ஒவ்வொரு தெரிவினையும் தெரிவுசெய்தோர் சதவீதம் | | | | விடுபட்டோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | |
| 1 | 4 | 4.54 | 11.98 | 11.66 | 71.58 | 0.24 |
| 2 | 1 | 79.08 | 12 | 6.74 | 2.04 | 0.14 |
| 3 | 2 | 20.8 | 43.16 | 26.56 | 9.12 | 0.36 |
| 4 | 2 | 8.08 | 56.92 | 23.5 | 11.16 | 0.34 |
| 5 | 1 | 78.7 | 7.7 | 10.38 | 2.96 | 0.26 |
| 6 | 1 | 78.96 | 12.3 | 4.12 | 4.46 | 0.16 |
| 7 | 3 | 6.04 | 14.18 | 58.74 | 20.8 | 0.24 |
| 8 | 3 | 12.78 | 4.08 | 79.14 | 3.7 | 0.3 |
| 9 | 2 | 8.7 | 79.62 | 5.74 | 5.74 | 0.2 |
| 10 | 3 | 10.88 | 11.86 | 67.26 | 9.72 | 0.28 |
| 11 | 1 | 68.38 | 19.58 | 7.12 | 4.72 | 0.2 |
| 12 | 2 | 8.38 | 51.44 | 19.26 | 20.7 | 0.22 |
| 13 | 3 | 8.94 | 9.84 | 69.82 | 11.1 | 0.3 |
| 14 | 4 | 6.84 | 6.34 | 6.52 | 80.04 | 0.26 |
| 15 | 2 | 14.4 | 64.94 | 5.44 | 15 | 0.22 |
| 16 | 2 | 3.44 | 65.98 | 7.26 | 23.18 | 0.14 |
| 17 | 3 | 9.94 | 10.46 | 75.5 | 3.9 | 0.2 |
| 18 | 1 | 65.32 | 12.22 | 6.38 | 15.9 | 0.18 |
| 19 | 3 | 7.28 | 10.8 | 78.22 | 3.6 | 0.1 |
| 20 | 2 | 16.46 | 38.88 | 28.34 | 16.06 | 0.26 |
| 21 | 4 | 11.2 | 13.7 | 11.24 | 63.74 | 0.12 |
| 22 | 3 | 30.98 | 19.46 | 41.7 | 7.66 | 0.2 |
| 23 | 2 | 5.62 | 74.9 | 11.5 | 7.88 | 0.1 |
| 24 | 3 | 39.02 | 23.22 | 21.92 | 15.36 | 0.48 |
| 25 | 2 | 10.88 | 63.1 | 12.6 | 13.14 | 0.28 |
| 26 | 2 | 10.34 | 81.32 | 4.54 | 3.76 | 0.04 |
| 27 | 3 | 15.42 | 9.34 | 37.4 | 37.6 | 0.24 |
| 28 | 4 | 15.36 | 20.06 | 20.66 | 43.7 | 0.22 |
| 29 | 2 | 26.62 | 41.3 | 19.78 | 12.14 | 0.16 |
| 30 | 4 | 24.76 | 15.88 | 15.6 | 43.52 | 0.24 |
| 31 | 3 | 48.8 | 4.68 | 22.34 | 23.88 | 0.3 |
| 32 | 2 | 18.84 | 50.52 | 21.94 | 8.44 | 0.26 |
| 33 | 4 | 18.7 | 22.6 | 26.96 | 31.38 | 0.36 |
| 34 | 2 | 25.52 | 27.54 | 7.06 | 39.64 | 0.24 |
| 35 | 4 | 15.04 | 26.5 | 8.46 | 49.74 | 0.26 |
| 36 | 2 | 4.38 | 48 | 6.5 | 40.98 | 0.14 |
| 37 | 3 | 4.14 | 5.82 | 54.6 | 35.22 | 0.22 |
| 38 | 2 | 23.08 | 40.1 | 9.34 | 27.24 | 0.24 |
| 39 | 1 | 28.46 | 33 | 25.08 | 13.2 | 0.26 |
| 40 | 3 | 3.7 | 10.92 | 70.46 | 14.68 | 0.24 |

**மூலம் : ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு 2020, இ.ப.தி**

ஒவ்வொரு வினாவின் கீழும் சரியான விடையைத் தெரிவு செய்த பரீட்சார்த்தி சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது. விடுபட்டோர் (Missing) என்பதால் காட்டப்படுவது வினாவிற்கு தெரிவுகளை மேற்கொள்ளாத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட பரீட்சார்த்திகளின் சதவீதம்.

### 2.1.6 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வு

#### 2.1.6.1 வினாப்பத்திரம் I இன் பகுப்பாய்வு சுருக்கம்

வினாப்பத்திரம் I ஆனது 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இவை மொழிவளம், இலக்கணப் பயன்பாட்டுத் திறன், கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் ஆகிய தொனிப்பொருள்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. இப்பல்தேர்வு வினாக்களில் 7 வினாக்கள் 40% இலும் குறைவான இலகுதன்மையைக் கொண்டுள்ளன. இவற்றுள் நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் என்ற தொனிப்பொருள் சராசரியாகக் குறைந்த இலகுதன்மையைக் காட்டியுள்ளது.


பரீட்சார்த்திகளுக்குப் பரிச்சயமான பாடப்பகுதிகளிலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்ட வினா உருப்படிகளுக்கு அதிகமான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளபோதிலும் மொழிவளத்தினைப் பொறுத்தமட்டில் ஒலிக்குறிப்புச் சொல்லிலும் இலக்கணப் பயன்பாட்டினைப் பொறுத்தமட்டில் வேற்றுமைகள், வினையாலணையும் பெயர் என்பன பற்றிய தெளிவின்மை என்பன பரீட்சார்த்திகளிடையே காணப்படுகின்றன. மேலும், ககர ஒலி வேறுபாடு, அகராதி ஒழுங்கு, தொகைநிலைத்தொகை, வினைச்சொல் தொடர்பான வினாக்களிலும் பரீட்சார்த்திகளுள் சிலர் சரியான விடையைத் தெரிவுசெய்வதில் இடர்ப்பட்டுள்ளனர்.

கிரகித்தல் திறனில் உவமையணியின் உறுப்புக்களைச் சரியாக இனங்கண்டு குறிப்பிடுவதில் இடர்ப்பட்டுள்ளனர். அத்தோடு நடைமுறை வழக்குச் சொற்களைப் பொருத்தமான இடத்தில் சரியாகப் பயன்படுத்துவதிலும் இடர்பட்டுள்ளனர்.

வினாப்பத்திரம் I இற்கான அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு பரீட்சார்த்திகளுக்கு வகுப்பறைரீதியான பயிற்சிகளை வழங்குதல் அவசியமாகும். இப்பயிற்சிகளை வழங்கும்போது, பரீட்சார்த்திகள் வினாக்களில் இடம்பெறும் முதன்மைச் சொற்களை அறிந்துகொள்வதற்கும், பாடநூலிலும், தாமாகத் தேடியறியும் வேறு நூல்களிலும் காணப்படும் பழமொழிகள், அருஞ்சொற்கள், கலைச்சொற்கள், மரபுத்தொடர்கள் என்பவற்றைப் கருத்துடன் ஆராய்ந்தறிவதற்கும், தரப்படும் விடயங்களைச் சரியாகக் கிரகிப்பதற்குமான ஆற்றலை வளர்த்துக்கொள்வதை முதன்மைப்படுத்துதல் வேண்டும்.

## 2.1.6.2 பாடத்தொனிப்பொருள் அடிப்படையிலான பகுப்பாய்வு

வரைபு 2.2 பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் வினாப்பத்திரம் 1 இன் இலகுதன்மைச்சுட்டி




**அட்டவணை 2.3** : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் இலகுதன்மை கூடிய வினாக்களும் இலகுதன்மை குறைந்த வினாக்களும்

| வினா இல. | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் இலகுதன்மையும் | | இலகுதன்மை குறைந்த வினாவும் இலகுதன்மையும் | |
|---|---|---|---|---|---|
| | | வினா இல. | இலகுதன்மை | வினா இல. | இலகுதன்மை |
| 1 - 20 | மொழி வளம் | 9 ,14 | 80% | 20 | 39% |
| 21 - 30 | இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 26 | 81% | 24 | 22% |
| 31 - 40 | கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் | 40 | 70% | 31 | 22% |

**மூலம்:** (RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.தி)

வரைபு 2.3 தொனிப்பொருளுக்கேற்ப வினாக்களின் இலகுதன்மை




**மூலம்** - (RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.தி)

- மொழிவளம் என்ற தொனிப்பொருளின்கீழ் வழங்கப்பட்ட 20 வினாக்களில் இலகுதன்மை கூடியவை 09, 14 என்பன ஆகும். அதன் இலகுதன்மை 80% ஆகும். இத்தொனிப்பொருளின் கீழ் இலகுதன்மை குறைந்தது வினா இலக்கம் 20 ஆகும். அதன் இலகுதன்மை 39% ஆகும்.
- இலக்கணப் பயன்பாட்டுத் திறன் என்ற தொனிப்பொருளின்கீழ் வழங்கப்பட்ட 10 வினாக்களில் இலகுதன்மை கூடியது வினா இலக்கம் 26 ஆகும். அதன் இலகுதன்மை 81% ஆகும். இலகுதன்மை குறைந்த வினா இலக்கம் 24 ஆகும். அதன் இலகுதன்மை 22% ஆகும்.
- கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் என்ற தொனிப்பொருளில் அமைந்த 10 வினாக்களில் இலகுதன்மை கூடியது வினா இலக்கம் 40 ஆகும். அதன் இலகுதன்மை 70% ஆகும். இலகுதன்மை குறைந்தது வினா இலக்கம் 31 ஆகும். அதன் இலகுதன்மை 22% ஆகும்.
- 40 வினாக்களில் 33 வினாக்களுக்கு 40% அல்லது அதற்குக் கூடிய பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

வினாத்தாள் I இல் 40% ஐ விடக் குறைந்த இலகுதன்மையைக் கொண்ட வினாக்களும் அவற்றிற்கு சரியாக விடையளித்தோரின் சதவீதமும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.4 : பாடத்தொனிப்பொருள் அடிப்படையில் 40% ஐ விடக் குறைவான இலகுதன்மை கொண்ட வினாக்கள்

| தொனிப்பொருள் | வினா இல. | சரியான விடையைத் தெரிவு செய்தோர் சதவீதம் |
|---|---|---|
| மொழி வளம் | 20 | 39% |
| இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 24 | 22% |
| | 27 | 37% |
| கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் | 31 | 22% |
| | 33 | 31% |
| | 34 | 28% |
| | 39 | 28% |

**மூலம்:** (RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.தி)

**மொழி வளம் (வினா இல. 1 - 20)**

**அவதானிக்கப்பட்டவை :**

- 1-20 வரையான வினாக்களில் 20ஆவது வினாவிற்குச் சரியான விடையைத் தெரிவுசெய்வதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.
- பரீட்சார்த்திகளிடம் ஒலிக்குறிப்புச் சொல் தொடர்பான போதியளவு விளக்கமின்மையால் இவ்வினாவிற்குச் சரியாக விடையளிப்பதில் இடர்பட்டுள்ளனர்.

**ஆலோசனைகள் :**

- ஒலிக்குறிப்பு சொற்கள் தொடர்பாகவும் அதன் பொருள் தொடர்பாகவும் பரீட்சார்த்திகளைத் தெளிவுபடுத்துதல்.
- இலக்கியப் பாடங்களில் காணப்படும் ஒலிக்குறிப்புச் சொல்லடங்கிய வாக்கியங்களை இனங்கண்டு அதன் பொருளை விளங்கப்படுத்துதல்.

**இலக்கணப் பயன்பாட்டுத் திறன் : (வினா இல.** 21 - 30)

**அவதானிக்கப்பட்டவை :**

- இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் கணிப்பிடும் 21-30 வரையான வினாக்களில் 24, 27 ஆகிய வினாக்களுக்கு 40%ற்குக் குறைவான பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- வினா இல. 24 இல் வேற்றுமைப் பொருளால் வேறுபடும் தொடரை சரியாக இனங்கண்டுகொள்ளமுடியாமல் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.
- வினா இல. 27 இல் வினையாலணையும் பெயர், வினைமுற்று என்பன குறித்துத் தெளிவான விளக்கமின்மை காணப்படுதல் புலப்படுகின்றது.

**ஆலோசனைகள் :**

- மாணவர்களுக்கு வேற்றுமையையும் வேற்றுமைகளின் பொருளையும் பல்வேறு உதாரணங்களின் மூலம் வகுப்பறையில் கற்பித்துப் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.
- வினையாலணையும் பெயரைத் தெளிவான விளக்கத்துடனும் பல்வேறு உதாரணங்கள் மூலமாகவும் கற்பித்துப் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

**கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் (வினா இல. 31 - 40)**

**அவதானிக்கப்பட்டவை :**

- 31, 33, 34, 39 ஆகிய வினாக்களுக்கு மிகக் குறைவானவர்களே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர்.
- **வினா இலக்கம் 31** ஆனது பரீட்சார்த்திகளிடையே கருத்தரங்கு, விரிவுரை, செயலமர்வு, கலந்துரையாடல் எனும் பதங்களுக்கான சரியான விளக்கம் இல்லாதிருப்பதைக் காட்டுகிறது.
- பரீட்சார்த்திகளிடம் தொடர்மொழிக்கு ஒருமொழி குறித்தான போதிய தேடலும் தெளிவும் இல்லாமை **வினா இலக்கம் 33** இற்கு அளித்திருக்கும் விடை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.
- பரீட்சார்த்திகளிடம் பாதீடு எனும் சொற்பதம் பற்றிய விளக்கமில்லாமையால் **வினா இலக்கம் 34** இற்கான அடைவுமட்டம் குறைவாக உள்ளது.
- **வினா இலக்கம் 39** ஆனது பரீட்சார்த்திகளிடம் உவமை அணியில் உவமானம், உவமேயம் தொடர்பான சரியான விளக்கம் இல்லாதிருப்பதையும், அவற்றுக்கிடையேயான பொதுத்தன்மையை இனங்கண்டு கொள்வதில் இடர்ப்பட்டமைமையையும் எடுத்துக்காட்டுகின்றது.

**ஆலோசனைகள் :**

- மாணவர்களுக்கு வகுப்பறையில் தொடர்மொழிக்கு ஒரு மொழியைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் கற்பித்தல்.
- மாணவர்களைச் சுயமாகத் தேடலில் ஈடுபடச்செய்தல்.
- கலைச்சொல் தொடர்பான விளக்கத்தினையும் நடைமுறையில் அவற்றின் பயன்பாடுகளையும் உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டல்.
- மாணவர்களுக்கு உவமையணி தொடர்பான விளக்கத்தினையும், உவமையின் உறுப்புக்களையும் இலக்கியப் பகுதிகள் ஊடாக போதியளவு எளிமையான உதாரணங்களைக் காட்டி மேலதிக பயிற்சிகளை வழங்குதல்.

### 2.1.6.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

#### I. மொழி வளம் - வினா இலக்கம் 1 - 20

வினா இலக்கம் 1-5 வரையானவை இலக்கியத்தோடு தொடர்புபட்டவையாக அவர்களுக்கு பரிச்சயமான சொற்பதங்கள் பற்றிய வினாக்களாக இருப்பதனால் பரீட்சார்த்திகள் இலகுவில் சரியான விடையை இனங்கண்டுள்ளனர். இருப்பினும் 3 ஆம் வினாவிற்கு 43% ஆனோரே சரியாக விடையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காரணம் பரீட்சார்த்திகள் வினாவின் தன்மையை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அடர்த்தி எனும் சொல்லின் எதிர்கருத்துக்குப் பதிலாக அநேக பரீட்சார்த்திகள் ஒத்தகருத்துச் சொல்லினைத் தெரிவுசெய்துள்ளனர்.

6ஆம் வினாவிற்கும் 8ஆம் வினாவிற்கும் 79% ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். எனினும் 7 வது வினாவில் பொருளால் வேறுபட்ட சொற்களைச் சரியாக இனங்காண்பதில் இடர்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது. அவ்வினாவிற்கு 59% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 9 வது வினா கலைச்சொல்லை இனங்காணும் வினாவாக அமைந்திருந்ததுடன், இந்தச் சொல் பரீட்சார்த்திகளுக்கும் பரிச்சயமான கலைச்சொல்லாக இருந்தமையால் 80% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர். 10 ஆம் வினா “மரபுப்பெயர்“ பற்றியது. இதற்கு 67% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். 11, 14 ஆகிய வினாக்கள் "தொடர்மொழிக்கு ஒரு மொழி" பற்றியது. இவற்றிற்கு முறையே 68%, 80% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். 12ஆம் வினா “இணைமொழி“ பற்றியது. இவ்வினாவிற்கு 51% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையினைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவில் எதிர்பொருள் தரும் இணைமொழி என்ற முதன்மைச் சொற்களை பரீட்சார்த்திகள் கவனிக்காது விட்டமை இதற்கான ஒரு காரணமாக இருக்கலாம். 13ஆம் வினாவும், 18ஆம் வினாவும் அருஞ்சொற்றொடர் பற்றியவை. 13வது வினாவிற்கு 70% ஆன பரீட்சார்த்திகளும் 18வது வினாவிற்கு 65% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர். அருஞ்சொற்றொடர்கள் நேரடியாக அல்லாது மறைமுகமாக உணர்த்தும் பொருள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் தெளிவின்மையே இதற்குக் காரணமாகும். 15ஆம் வினாவிற்கு 65% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர்.

16ஆம் வினா “பழமொழி“ பற்றியது. 66% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். மிக இலகுவானதாகவும் நடைமுறை சார்ந்ததாகவும் இருந்தும் சரியான விடையைத் தெரிவுசெய்யத் தவறியமைக்குக் காரணம் பழமொழிகள் பற்றிய பயிற்சி இன்மையே ஆகும். நடைமுறையிலுள்ள பழமொழிகள் பற்றிய பயிற்சி பரீட்சார்த்திகளுக்கு மிக அவசியமாக வழங்கப்படல் வேண்டும். 17ஆம் வினா “உவமைத்தொடர்” பற்றியது. இதற்கு 76% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். 19ஆம் வினா “இரட்டைக்கிளவியை“ இனங்காணும் வினாவாக இருந்தது. இதற்கு 78% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இரட்டைக்கிளவி மொழிவளத்துடன் தொடர்புடையதாக இருந்ததால் பரீட்சார்த்திகள் அதனை இலகுவில் இனங்கண்டுள்ளனர்.

20ஆம் வினா “ஒலிக்குறிப்புச் சொல்” பற்றியது. இதற்கு 39% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினா பரீட்சார்த்திகளுக்கு இலகுதன்மை குறைந்ததாக காணப்பட்டது. ஆசிரியர்கள் பரீட்சார்த்திகளுக்கு சரியாக ஒலிக்குறிப்புச் சொல் குறித்து கற்பித்து முறையாகப் பயிற்சிகளை வழங்குதல் வேண்டும். குறிப்பாக, இவ்வினா இலக்கியப் பாடப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இலக்கியப் பாடங்களைக் கற்பிக்கும்போது இத்தகைய ஒலிக்குறிப்புச் சொல்பற்றிய விளக்கத்தை இலக்கிய ஆதாரங்களுடன் நயந்து கற்பிக்க வேண்டும்.

## II. இலக்கணப் பயன்பாட்டுத்திறன் - வினா இலக்கம் 21 - 30

21 ஆம் வினா "மாற்றொலியன்கள்" தொடர்பானது. இதற்கு 64% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல. 22, 28, 29, 30 ஆகியவற்றுக்கு முறையே 42%, 44%, 41%, 44% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். பெயர்ப் பகுபதம், அகராதி ஒழுங்கு, தொகைநிலைத்தொடர், வினைச்சொல் தொடர்பாகவும் பரீட்சார்த்திகளுக்குப் போதிய பயிற்சிகளை வழங்க வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. வினா இல. 28 அகராதி ஒழுங்கைப்பற்றியதாகும் பரீட்சார்த்திகள் இந்த வினாவினை ஆழமாக அணுகவில்லை என்பது அவர்கள் தெரிவுசெய்துள்ள விதத்தில் இருந்து புலப்படுகின்றது. இலக்கணச் சொற்றொடர்களை இனங்காண்பதில் பரீட்சார்த்திகளிடையே தெளிவின்மை காணப்படுவதாலேயே இத் தொகுதி வினாக்களில் பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவுசெய்யவில்லை. பரீட்சார்த்திகள் விளங்கிக் கற்கக்கூடிய வகையில் ஆசிரியர் தமது கற்பித்தல் நுட்பங்களை வடிவமைத்துக்கொள்ள வேண்டும்.

வினா இல. 23 "அடைமொழியோடு" தொடர்புடையது. இதற்கு 75% ஆன பரீட்சார்த்திகள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளனர். வினா இலக்கங்கள் 24, 27 ஆகியவற்றுக்கு முறையே 22%, 37% ஆனோரே மிகச் சரியான விடைகளைத் தெரிவு செய்துள்ளனர். வேற்றுமை, வினையாலணையும் பெயர்பற்றிய தெளிவான விளக்கமின்மையே இந்த குறைவான சதவீதத்திற்கு காரணமாக இருக்கலாம். இவ்விடயம் தொடர்பாகப் போதிய பயிற்சிகளை பரீட்சார்த்திகளுக்கு வழங்க வேண்டியது அவசியமாகும்.

வினா இல. 25 "புணரியலில் இடம்பெறும் கெடுதல் விகாரம்" தொடர்புடையது. இதற்கு 63% மானோரே மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். வினா இல. 26 இணைப்பிடைச்சொல் பற்றியது. இது பரீட்சார்த்திகளுக்கு பரிட்சயமான விடயமாக இருந்தமையால் 81% மானோரே மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர்.

## III கிரகித்தல், நடைமுறை வழக்குச் சொற்கள், பந்தியாக்கம் - வினா இல. 31 - 40

வினா இல. 31, 33, 34 ஆகியவற்றுக்கு முறையே 22%, 31%, 28% ஆன பரீட்சார்த்திகளே மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாக்கள் பரீட்சார்த்திகள் எந்தளவிற்கு சொற்களஞ்சியத்தை விருத்தி செய்துள்ளனர் என்பதை பரீட்சிக்கும் வினாக்களாக அமைந்திருந்தன. இம்மூன்று வினாக்களிலும் மிகப்பொருத்தமான விடையை மிகக்குறைவான பரீட்சார்த்திகளே தெரிவுசெய்திருந்தனர். இவற்றில் 31வது வினாவுக்கு 48.8% ஆன பரீட்சார்த்திகள் பிழையானவிடையான 1வது தெரிவைத் தெரிவுசெய்திருந்தனர். இதற்கான காரணம் கருத்தரங்கு மூலம் நாடகத்துறையில் அனுபவ அறிவை பெறமுடியும் என பிழையாக விளங்கிக்கொண்டமை ஆகும். 34 வது வினாவுக்கு 39.64% ஆன பரீட்சார்த்திகள் பிழையான விடையான 4 வது தெரிவைத் தெரிவுசெய்திருந்தனர். காரணம் சரியான விடையான பாதீடுபற்றிய பொருள் விளக்கம் இல்லாமையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள, இந்த ஆண்டுக்கான அறிக்கையே சரியான விடையாக இருக்குமென்ற ஊகத்தின் அடிப்படையில் விடையளித்துள்ளமையைக் குறிப்பிடலாம். எனவே, பரீட்சார்த்தி மத்தியில் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்குப் பொருத்தமுடைய பயிற்சியினை வழங்குதல் வேண்டும். சொற்களஞ்சியங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துதலானது அடைவுமட்டத்தை அதிகரிக்க வழிவகுக்கும்.

32 ஆம் வினா "அணியோடு" தொடர்புபட்ட வினாவாகும். இதற்கு 51% ஆன பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். வகுப்பறையில் அதிக பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக பரீட்சார்த்தீன் அடைவு மட்டத்தை மேலும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

35ஆம் 36ஆம் வினாக்கள் வாக்கிய இயைபுடன் தொடர்புபட்டவையாகும். இவற்றுக்கு பரீட்சார்த்திகளில் முறையே 50%, 48% ஆனோர் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளனர். சரியான வினை முற்றுக்களைத் தெரிவுசெய்வது தொடர்பில் பரீட்சார்த்திகளுக்குப் போதியளவு பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக அவர்களது வாக்கிய இயைபு தொடர்பான அடைவுமட்டத்தை அதிகரிக்கச் செய்யமுடியும்.

வினா இல. 37, 38, 39 ஆகிய வினாக்கள் பாடலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கள் ஆகும். இது பரீட்சார்த்திகள் பாடலை நயந்து பொருளை விளங்கிக்கொண்டார்களா? என்பதைப் பரீட்சிக்கும் வினாவாக அமைந்துள்ளது. இங்கு தரப்பட்ட பாடல் எளிய மொழிநடையில் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடிய பாடலாக அமைந்திருந்தது. ஆயினும் இவ்வினாக்களுக்கு முறையே 55%, 40%, 28% என்ற அடிப்படையில் பரீட்சார்த்திகள் சரியான விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். 39 ஆம் வினா “உவமையணியுடன்” தொடர்புபட்ட வினாவாகக் காணப்பட்டதோடு இதற்கு 28% ஆனோரே சரியான விடையினைத் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கு 33% ஆன பரீட்சார்த்திகள் பிழையான விடையான 2 வது தெரிவைத் தெரிவுசெய்துள்ளனர். காரணம் பரீட்சார்த்திகள் பாடலில் உள்ள உவமையணியின் பொருத்தப்பாட்டைத் தெளிவாகப் புரிந்துகொள்ளாமையையும் உவமை உறுப்புக்கள் தொடர்பான போதிய விளக்கம் இல்லாமையையும் குறிப்பிடலாம். எனவே, பரீட்சார்த்திகளுக்கு அணி தொடர்பாக பூரணமான விளக்கங்களை இலக்கியப் பாடத்தின் ஊடாகவும் மேலதிக பயிற்சிகளை வழங்குவதன் ஊடாகவும் வலியுறுத்தி அவர்களது அடைவுமட்டத்தை அதிகரிக்க வேண்டும்.

வினா இல. 40 ஆனது பந்தியாக்கம்பற்றிய வினாவாக அமைகிறது. ஒழுங்கின்றி வழங்கப்படும் வாக்கியங்களை கருத்தொழுங்கில் ஒழுங்கமைத்து கட்டுக்கோப்பான பந்தியொன்றை அமைக்கும் ஆற்றலை பரீட்சார்த்திகளிடத்தில் பரீட்சிக்கும் வினாவாக இது அமைந்துள்ளது. இவ் வினாவிற்கு 70% ஆனோர் சரியான விடையினைத் தெரிவு செய்துள்ளனர். வாக்கியங்களின் பொருளை உணர்ந்து அவற்றை ஒழுங்கு முறையில் தொடர்புபடுத்தி பந்தியாக்கம் செய்வதற்குரிய பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக பரீட்சார்த்திகளது அடைவுமட்டத்தினை அதிகரிக்கச் செய்யமுடியும்.

### 2.1.6.4 வினாப்பத்திரம் I இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள்

- 1 ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து அவ்விடைக்குரிய இலக்கத்தைக் கொண்ட கூட்டினுள் தெளிவாகப் புள்ளடியிடல் வேண்டும்.

- இவ்வினாப்பத்திரம் 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. 1 - 20 வரையான வினாக்கள் மொழிவளத்தைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.

  21 - 30 வரையான வினாக்கள் இலக்கணப் பயன்பாட்டுத் திறனைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.

  31 - 40 வரையான வினாக்கள் நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் என்பவற்றில் மாணவர்களது ஆற்றலைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.

- இம்முறை வினாப்பத்திரத்தில் மாணவர்கள் கிரகித்தல், நடைமுறைவழக்குச் சொற்களைப் பயன்படுத்தல் ஆகியன தொடர்பில் இடர்பட்டுள்ளனர். மாணவர்கள் வகுப்பறையில் தொடர்பாடல் மேற்கொள்ளும் வகையிலான செயற்பாடுகளின் ஊடாக அவர்களிடையே சொற்களஞ்சிய விருத்தியை ஏற்படுத்திக் கலைச்சொற் பிரயோகங்கள் சார்ந்த அந்நியத்தன்மையை மாணவர்களிடமிருந்து நீக்குதல் வேண்டும்.

- இலக்கண வினாக்கள் தொடர்பில் மாணவர்கள் இடர்படுவதான நிலை காணப்படுமிடத்து, பாடநூலைக் கற்பிக்கும்போது அதனோடு ஒன்றியதாகவே இலக்கணத்தையும் கற்பித்தல் பொருத்தமானதாக அமையும். மேலதிக பயிற்சிகளை வழங்குவதனூடாக இலக்கணப் பயன்பாடு தொடர்பில் மாணவர்களின் தன்னம்பிக்கையையும் தெளிவான நிலைப்பாட்டையும் அதிகரித்தல் வேண்டும்.

- விடையளிக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்ய இடர்படின், கொடுக்கப்பட்ட கவனக்கலைப்பான்களை (பிழையான விடைகளை) நீக்கி, மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்வதற்குப் பயிற்சி வழங்குதல் வேண்டும்.

2.2 **வினாப்பத்திரம் II இன் வினாக்களும் அவற்றுக்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்**

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு


- **நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம் :- 80 புள்ளிகள்**
- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10.
   ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் - 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல். வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும் - 25 புள்ளிகள்
3. சுருக்கம் எழுதுதல் - 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் - 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் - 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+25+10+10+15 = 80 புள்ளிகள்**

### 2.2.2 வினாப்பத்திரம் II இல் - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்

வரைபு 2.4 வினாப்பத்திரம் **II** இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்





இவ்வினாப்பத்திரத்தின் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமானதாகும். எனினும் முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்களுக்கு 99% ஆனோரும் நான்காம், ஐந்தாம் வினாக்களுக்கு 98% ஆனோருமே விடையளித்துள்ளனர்.

**மூலம்** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 2.2.3 வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கான இலகுதன்மைச் சுட்டிகள்

வரைபு 2.5 வினாப்பத்திரம் **II** இன் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய உப பிரிவுகளுக்கான இலகுதன்மைச் சுட்டிகள்





மூலம்: (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

மேலேயுள்ள வரைபின் அடிப்படையில் வினா இலக்கம் 4 இன் உப பிரிவு (ii) க்கான இலகுச்சுட்டி 0.85 ஆகும். ஆகவே, இதன் இலகுதன்மை 85% ஆகும். இதனால் கருதப்படுவது 85% ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்துள்ளனர் என்பதாகும். இங்கு இலகுதன்மை குறைந்த வினாவாக வினா இலக்கம் 1 இன் உபபிரிவு (iv) காணப்படுகின்றது. இதன் இலகுதன்மை 5% ஆகும். எனவே வினாப்பத்திரம் II இல் வினா இலக்கம் 1 இன் பிரிவு (iv) பரீட்சார்த்திகளுக்குக் கடினமான வினாவாகவும் வினா இலக்கம் 4 (II) பரீட்சார்த்திகளுக்கு இலகுவான வினாவாகவும் காணப்படுகின்றன.

## 2.2.4 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்

வரைபு 2.6 வகுப்பாயிடைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வினாவுக்குமான பரீட்சார்த்திகளின் அடைவு




**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :

1 வது வினாவுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். புள்ளி வீச்சு 00%-25% க்கு இடையில் (0-5 புள்ளிகள்) 29% ஆனோரும், புள்ளிவீச்சு 26%-50 %க்கு இடையில் (6-10 புள்ளிகள்) 42% ஆனோரும், புள்ளிவீச்சு 51%-75% க்கு இடையில் (11-15 புள்ளிகள்) 24% ஆனோரும், புள்ளிவீச்சு 76%-100% இடையில் (16-20 புள்ளிகள்) 5% ஆனோரும் பெற்றுள்ளனர்.

வினா இலக்கம் 4 இல் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள புள்ளிகள் உயர் புள்ளி வீச்சில் காணப்படுகின்றது. இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில் 70% ஆனவர்கள் 8 அல்லது அதனிலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

### 2.2.5 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வு

#### 2.2.5.1 வினாப்பத்திரம் II இன் பகுப்பாய்வுச் சுருக்கம்

வினாப்பத்திரம் II ஆனது பரீட்சார்த்திகளின் எழுத்தறிவைப் பரீட்சித்தலை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வினாப்பத்திரத்தின் அனைத்து வினாக்களும் கட்டாயமானவை என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்திருக்கவில்லை.

வினாப்பத்திரம் II இன் குறுவினாக்கள் இலக்கண அடிப்படையில் அமைவதால் இவை தேர்ச்சி இலக்கம் 08 இன் அடைவைப் பரீட்சிக்கின்றன. இதன் மூலம் எழுத்துப்பொறிமுறைகளை அனுசரித்து வழுவின்றி நேர்த்தியாக எழுதுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. அநேகமான பரீட்சார்த்திகள் வினா இலக்கம் 1 இன் குறுவிடை வினாக்களிலும் வினா இலக்கம 3 இன் சுருக்கம் எழுதுதல் எனும் பகுதியிலும் எதிர்பார்த்த அடைவுமட்டத்தை அடையவில்லை. செய்வினை வாக்கியத்தை செயப்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுவதில் இடர்பட்டமை, வழு நீக்கி எழுதுதல், வாக்கியங்களை இணைத்து தனிவாக்கியங்களாக அமைத்தல், ஆகுபெயர், உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுதல், வாக்கிய உறுப்புக்கள் எனும் விடயங்களில் பரீட்சார்த்திகள் சரியான துலங்கல்களை வெளிப்படுத்தி இருக்கவில்லை.

2 ஆம் வினாவானது எழுத்தாக்க நுட்பங்களைப் பரீட்சிக்கும் தேர்ச்சி இல. 10 ஆகும். இதில் படைப்புகளை வாசித்த அனுபவங்கள் ஊடாக படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களை சுயமாக எழுத எதிர்பார்க்கும் தேர்ச்சி இலக்கம் 11 உடனும் தொடர்புடையதாகும். கட்டுரை வினாக்களுக்கான விடைகளை எழுதும்போது வழங்கப்பட்டிருந்த வழிகாட்டற் குறிப்புகளை சரியாகக் கிரகித்துப் பின்பற்றாமை ஒரு குறைபாடாக அவதானிக்கப்பட்டது. கட்டுரையின் புள்ளிவழங்கும் நியதிக்கமைய கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும், எழுத்து நுட்பங்களை அனுசரித்து எழுதியமையும் குறைவாகும். மேலும் சிறுகதை/உரையாடலுக்கான பொருத்தமான களம், அமைப்பு என்பனவும் திருப்திகரமான நிலையில் பின்பற்றப்பட்டிருக்வில்லை.

சுருக்கம் எழுதும் வினாவானது மௌனமாக வாசித்து, கிரகித்து, துலங்கலை எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டம் 6.1 உடன் தொடர்புடையது. சுருக்கம் எழுதும்போது அநேகமானவர்கள் விடய உள்ளடக்கத்தை சரியாகக் கிரகித்து சுருக்கமாக எழுதுவதைத் தவறவிட்டிருந்தனர். பந்தியின் மையக் கருத்தையும், துணைக் கருத்துக்களையும் தெளிவாக வெளிப்படுத்துவதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டனர் என்பது பகுப்பாய்வில் புலப்படுகின்றது.

வினா இல. 04 ஆனது தேரச்சி இல. 07 உடன் தொடர்புடைய கிரகித்தல் வினாவாகும். இரசனைக்காகவும், ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. கிரகித்தல் வினாவில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். 8% ஆனோரே 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

நடைமுறை வழக்கில் எழுதுதல் வினாவானது தேர்ச்சி இலக்கம் 09, 11 என்பவற்றுடன் தொடர்புடையது. இதன் மூலம் வாசித்து கிரகித்த விடயங்களை எழுதுவதும், நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவதும் எதிர்பார்க்கப்படுகிறது. நடைமுறைத் தேவைக்காக எழுதுதல் தொடர்பிலான வினாவில் கடிதம் எழுதியமையில் பரீட்சார்த்திகள் போதிய புள்ளிகளைப் பெற்றிருப்பினும் துண்டுப்பிரசுரம் எழுதுவதில் அமைப்புப் பகுதியல் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து, சரியாக விளங்கி விடையெழுதுவதற்கும் தெளிவான கையெழுத்தில் சரியாக பந்திபிரித்து விடயங்களை எழுதுவதற்கும் சொந்த மொழிநடையைப் பயன்படுத்துவதற்கும் தொடர்ந்து பரீட்சார்த்திகளுக்குப் பயிற்சி அளிப்பதன்மூலம் இவ்வினாப்பத்திரத்துக்கான அடைவு மட்டத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

## 2.2.5.2 வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாக்களினதும் விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

**வினா இலக்கம் 1 உம் அதன் எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

சுருக்கமான விடை எழுதுக.

(i) 'கணக்காயரில்லாதவூர்' எனும் சொற்றொடரைப் பிரித்தெழுதுக.

கணக்காயர் + இல்லாத + ஊர்

(ii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு, அதனை மீண்டும் எழுதுக.
விலகு பிள்ளை என்று சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை விலகி இடங்கொடுத்தார்

"விலகு பிள்ளை" என்று சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை விலகி இடங்கொடுத்தார்.
**அல்லது**
'விலகு பிள்ளை' என்று சொல்ல முன்னமே விசுவநாதபிள்ளை விலகி இடங்கொடுத்தார்.

(iii) சங்கப்பாடலை வைத்து, கவிஞரால் உருவாக்கப்பட்டதே இந்நாடகம்.
மேலே தரப்பெற்றுள்ள செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

சங்கப்பாடலை வைத்து கவிஞர் உருவாக்கியதே இந்நாடகம்.

(iv) ஒவ்வொரு கலைக்கும் அவற்றுக்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன.
இவ்வாக்கியத்தை வழுநீக்கி எழுதுக.

ஒவ்வொரு கலைக்கும் அதற்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன.
**அல்லது**
ஒவ்வொரு கலைக்கும் அததற்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன.

(v) - பாரதியார் நவீன கவிதையின் முன்னோடி.
- பாரதியார் பாஞ்சாலி சபதம் பாடினார்.
மேற்படி இரண்டு வாக்கியங்களையும் ஒரு வாக்கியமாக்கி எழுதுக.

நவீன கவிதையின் முன்னோடியாகிய பாரதியார், பாஞ்சாலி சபதம் பாடினார்.
**அல்லது**
பாஞ்சாலி சபதம் பாடிய பாரதியார் நவீன கவிதையின் முன்னோடி.

(vi) 'அந்த அதிர்ச்சியான செய்தி கேட்டு உலகு கலங்கியது' - இதில் காணப்பெறும் ஆகுபெயரை இனங்கண்டு, அது எவ்வகை ஆகுபெயர் எனவும் குறிப்பிடுக.

ஆகுபெயர் – உலகு
இடவாகுபெயர்

Department of Examinations - Sri Lanka

(vii) 'அலை' என்ற சொல், பெயராகவும் வினையாகவும் அமையுமாறு ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

பெயர் : கடலானது அலை அடித்து மிகவும் சத்தமிட்டது.
வினை : நீ வரும்வரை அலைந்து திரிந்தேன்.
(இவை போன்ற பொருத்தமான சரியான வாக்கியங்கள்)

(viii) பின்வரும் வாக்கியத்தில் காணப்பெறும் வினையடை யாது?
கரிய பெரிய யானைகள் பயங்கரமாக ஓடின.

பயங்கரமாக

(ix) அவன் என்னை நல்லவனாக எண்ணியிருந்தான்.
இந்த உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக.

அவன் என்னை நல்லவனாக எண்ணியிருக்கவில்லை / எண்ணவில்லை / எண்ணிலன்


(x) பந்தியின் முதன்மைக் கருத்தை உறுதியாகத் தெளிவுபடுத்தினார்.
இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள் யாது?

முதன்மைக்கருத்து

(02 x 10 = 20 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

வரைபு 2.7 வினாப்பத்திரம் II இன் 1 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





முதலாம் வினா கட்டாய வினாவாகும். இதற்கு 99% ஆனோரே விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.
இதில்,
00-05 வரையான புள்ளி வீச்சில் 29% ஆனோரும்
06-10 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
11-15 வரையான புள்ளி வீச்சில் 24% ஆனோரும்
16-20 வரையான புள்ளி வீச்சில் 5% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 5% வீதமானோர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை, 29% வீதமானோர் 05 அல்லது அதற்கு குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.தி)

வரைபு 2.8 வினாப்பத்திரம் II இன் 1 ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வினாப்பத்திரம் II இல் 10 குறுவினாக்கள் கொண்ட 1ஆம் வினாவில் பிரிவு (i) இலகுதன்மை கூடியதாக அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 79% ஆகும். உப பிரிவு (iv) இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது.அதன் இலகுதன்மை 5% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

iii. செயப்பாட்டுவினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக மாற்றுவதில் போதிய இலக்கண அறிவு இன்மை.

iv. வழுவுள்ள வாக்கியத்தை வழுநீக்கி எழுதுவதில் இடர்பட்டமை.

v. தனி வாக்கியத்தை இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தாமல் கூட்டு வாக்கியமாக மாற்றிப் பொருள் பொருத்தமுற எழுதுவதில் இடர்பட்டமை.

vi. ஆகுபெயரை இனங்காண்பதிலும் அதன் வகையைக் கண்டறிவதிலும் தெளிவின்மை காணப்பட்டமை.

ix. உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றுவதில் போதிய இலக்கண அறிவின்மையும் எதிர்க்கருத்து சொல்லுக்கும் எதிர்மறை வினைக்கும் இடையிலான வேறுபாட்டினை அறியாமையும்.

x. வாக்கியத்தில் செயப்படுபொருளை இனங்காண்பதில் இடர்பட்டமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- செயப்பாட்டுவினை வாக்கியங்களை செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதும்போது பயன்படுத்தவேண்டிய இலக்கண நுட்பங்களைப் போதிய உதாரணங்கள் மூலம் விளக்குதல்.
- வகுப்பறையில் வழுவுள்ள வாக்கியங்களை வழங்கி, அவற்றை வழுவற்ற வாக்கியமாக மாற்றுவதற்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.
- இணைப்பிடைச் சொற்களையும் வினையெச்சங்களையும் பயன்படுத்தி தனிவாக்கியங்களை இணைத்துக் கூட்டுவாக்கியங்களாக எழுதுவதற்குப் பயிற்சிகளை வழங்குதல். வினாத்தாளில் இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இணைக்குமாறு கேட்டால் மாத்திரமே இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்தவேண்டும் என்ற அறிவுறுத்தலை பரீட்சார்த்திகளுக்கு வழங்குதல். தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியங்களாக மாற்றுவதற்கு இலகுவான உதாரணங்கள்மூலம் பயிற்சிகளை அளித்தல்.
- ஆகுபெயர் தொடர்பான விளக்கத்தைப் பொருத்தமான உதாரணங்களுடன் தெளிவுபடுத்துதல்.
- உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுதும்பொழுது நடைமுறை உதாரணங்களுடன் விளக்கமளித்தலும் பயிற்சி வழங்குதலும். எதிர்க்கருத்து சொல்லுக்கும் எதிர்மறை வினைக்கும் இடையிலான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தல்.
- வாக்கியம் ஒன்றில் வாக்கிய உறுப்புக்களை இனங்காண்பதில் போதியளவு பயிற்சிகள்

வினா இல. 2

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) எமது நாடு சகல இயற்கை வளங்களும் நிறைந்த ஒரு நாடாகும். இன்றைய சூழ்நிலையில் இவ்வளங்களைப் பயன்படுத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும். விவசாயம், உள்ளூர் உற்பத்தி முதலான துறைகளை விருத்தி செய்வதன் மூலம் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற முடியும். இது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ள ஊடகங்களுள் தொலைக்காட்சி முக்கியமானதாகும். அதில் பல்வேறு அலைவரிசைகளினூடாக பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. அந்நிகழ்ச்சிகளால் நன்மைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் ஒருவருக்கும் தீமைகளே பெரிதும் ஏற்படுகின்றன எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஒரு **உரையாடல்.**

(iii) சமுதாயத்தில் ஒருவர் உயர்ந்தவராகக் கருதப்படுவதற்கு, பதவி, படிப்பு, பணம் எனப் பல காரணங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்றோ பலவோ இருப்பதனால் மட்டுமே ஒருவர் உயர்ந்தவராகக் கருதப்படமாட்டார். இவற்றோடு நற்பண்பும் உடைய ஒருவரே பிறரால் மதிக்கப்படுவார். இக்கருத்தை விளக்கும் வகையிலான ஒரு **மேடைப்பேச்சு.**

(iv) இன்று என் வாழ்வில் மறக்கமுடியாத ஒருநாள். கடல்கோளால் என் கிராமம் சிதைந்துவிட, உயிரைக் கையில் பிடித்தபடி ஓடி... ஆறு ஆண்டுகளின் பின் இன்றுதான் என் சொந்த ஊருக்குத் திரும்புகிறேன்... அந்த ... அந்தக் கொடிய நாளை நினைத்தாலே நெஞ்சு பதறும்... - என்ற வகையில் தொடங்கி அனுபவங்களை விவரிப்பதான ஒரு **சிறுகதை.**

## 2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

i.

- எமது நாட்டில் காணப்படும் வளங்கள்
- வளங்களின் முக்கியத்துவம்
- வளங்களைப் பொறுப்போடும் புத்திசாலித்தனத்தோடும் பயன்படுத்தலின் அவசியம்
- தற்போதைய பொருளாதார வீழ்ச்சிப்போக்கு
  (போக்குவரத்துத் தடை, இறக்குமதி இன்மை, பொருட்கள் தட்டுப்பாடு)
- உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியம்
  (இஞ்சி, மிளகு, உழுந்து, மஞ்சள் முதலியன)
- குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம்
- விலங்கு வேளாண்மையின் அவசியம்

**மாதிரித் தலைப்புகள் :** தன்னிறைவுப் பொருளாதாரம்
பொருளாதாரத்தில் தன்னிறைவு

Department of Examinations - Sri Lanka

ii.

தொலைக்காட்சி அலைவரிசைகள் பற்றிய அறிமுகம்

**நன்மைகள்**

- வீட்டில் இருந்தபடியே உலகளாவிய விடயங்களை அறிதல்
- பல்துறைசார் விடயங்கள் (விளையாட்டு, கல்வி, கலை, அறிவியல் போன்றன)
- சிறந்த பொழுதுபோக்குச் சாதனம்
- அவரவர் விருப்புக்கேற்ற நிகழ்ச்சித் தெரிவுக்கு வாய்ப்பு
- எழுத்தறிவு இல்லாதவர்கள்கூடப் பயன்பெறலாம்

**தீமைகள்**

- நேரம் வீணாதல்
- சோம்பேறிகளாதல்
- கல்வியில் மாணவரது நாட்டம் குறைதல்
- பண்பாட்டுக்கு முரணான நிகழ்ச்சிகளால் தீமை ஏற்படல்
  ( மது, புகைத்தல், பாலியல் குற்றங்கள் முதலியன)

**மாதிரித் தலைப்புகள் :** தொலைக்காட்சியின் நன்மை, தீமைகள்
தொலைக்காட்சியின் தாக்கம்

iii.

- ஒரு மனிதனுக்கு சமுதாய மதிப்பு அவசியமானது
- சமூகத்தில் பொதுவாக மதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள்
  - ✔ பதவி
  - ✔ படிப்பு
  - ✔ பணம் முதலியன
- இவையன்றி நற்பண்புடையோராகவும் இருத்தல் மிகவும் அவசியம்
- நற்பண்புகளாவன
  - ✔ அன்பு
  - ✔ நேர்மை
  - ✔ வாய்மை
  - ✔ பிறரை மதித்தல்
  - ✔ சமூகப் பணிகளில் ஈடுபடல்
  - ✔ செருக்கற்ற நிலை
  - ✔ தற்பெருமை இன்மை
  - ✔ பெரியோரை மதித்தல்

Department of Examinations - Sri Lanka

- நற்பண்புடைய ஒருவரையே சமூகம் பெரிதும் ஏற்கும்
- நற்பண்புகள் இல்லாத ஒருவரைச் சமூகம் ஒதுக்கும்
- இன்றைய நிலையில் நற்பண்புகளைப் பேணுதல் இன்றியமையாததாகும்

**மாதிரித் தலைப்புகள் :** மனிதனும் நற்பண்புகளும்
பண்புடையோரையே பார் போற்றும்

iv.

- சிறுகதை தற்சார்புடையதாக அமைதல்.
- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்.
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கு அமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- கதையைச் சுவைபடவும் விறுவிறுப்பாகவும் யதார்த்தப் போக்கில் நகர்த்திச் செல்லுதல்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடையைப் பயன்படுத்துதல்.
- இயல்பான பாத்திர உரையாடலைக் கையாளுதல்.
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- முடிவு பொருத்தமாக அமைதல்.


**மாதிரித் தலைப்புக்கள் :** திக்கற்றவனாக...
மீண்டும் ஊரை நோக்கி....

## வினா இல. 02 புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| (அ) | பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| (ஆ) | கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 06 புள்ளிகள் |
| (இ) | எழுத்து நுட்பங்கள் | 05 புள்ளிகள் |
| (ஈ) | தலையங்கம் | 02 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **25 புள்ளிகள்** |

## 2 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:

**வரைபு 2.9** வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





2ஆம் வினா கட்டாய வினாவாகும். எனினும் 99% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். இதில்,
00-06 வரையான புள்ளி வீச்சில் 10% ஆனோரும்
07-12 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
13-18 வரையான புள்ளி வீச்சில் 50% ஆனோரும்
19-25 வரையான புள்ளி வீச்சில் 15% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 15% வீதமானோர் 19 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 10% வீதமானோர் 06 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

(RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

**வரைபு 2.10** வினாப்பத்திரம் II இன் 2ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வினாப்பத்திரம் II இல் 2 ஆம் வினாவான கட்டுரை வினா கட்டாயமானதாகும். இதில் வழங்கப்பட்ட 4 தெரிவுகளில் (iii) ஆம் தெரிவான மேடைப்பேச்சுக்குரிய சராசரி இலகுதன்மை 58% ஆகும். இதுவே அதிக இலகுதன்மை கொண்ட தெரிவாகும். இலகுதன்மை குறைந்த தெரிவாக (ii) ஆம் தெரிவான உரையாடல் காணப்படுக்கின்றது. இதன் சராசரி இலகுதன்மை 48% ஆகும்.

புள்ளிவழங்கும் திட்ட நியமங்களின் அடிப்படையில் மேடைப்பேச்சைத் தெரிவுசெய்த பரீட்சார்த்திகளில் 61% ஆனவர்கள் பொருத்தமான தலையங்கத்தை சரியாக எழுதியுள்ளனர். எனினும் 56% ஆனவர்களே பொருளமைவும் அளவும் எனும் நியதிக்கமைய சரியாக மேடைப்பேச்சை எழுதியுள்ளனர். மேலும், உரையாடலைத் தெரிவுசெய்த பரீட்சார்த்திகளிலும் 42% ஆனோர் மாத்திரமே பொருளமைவையும் அளவையும் சரியாகப் பின்பற்றி விடை எழுதியுள்ளனர்.

பொதுவாக, அனைத்துத் தெரிவுகளிலும் பரீட்சார்த்திகள் பொருளமைவும் அளவும் என்ற நியதியில் குறைந்தளவிலான புள்ளிகளையும், எழுத்து நுட்பங்கள், தலையங்கம் ஆகிய புள்ளித்திட்ட நியதிகளில் ஒப்பீட்டளவில் அதிக புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- கொடுக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளை அவதானித்து கட்டுரை எழுதப்படாமை.
- தலைப்பு நீண்டதாகவும் பொருத்தமற்றதாகவும் இருந்தமை.
- மொழிச் செம்மை திருப்திகரமாக அமையாமை.
- எழுத்துப் பிழை, வாக்கிய வழு என்பன அதிகமாக இருந்தமை.
- உரையாடல் பொருள்பட எழுதப்படாமை.
- சிறுகதையை சுவைபட விறுவிறுப்பாக நகர்த்திச் செல்லாததோடு கதைகூறும் பாங்கில் அமைந்திருந்தமை.
- சிறுகதைக் கருவை விளங்கிக்கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- தலைப்பினைச் சுருக்கமாகவும் கவர்ச்சிகரமாகவும் எழுத வழிப்படுத்தல்.
- ஆசிரியர்கள் பயிற்சிக்காக கட்டுரைத் தலைப்புக்களைக் கொடுத்து அதற்கேற்ற வழிகாட்டற் குறிப்புகளை வழங்கியும் எழுத வழிப்படுத்துதல்.
- சட்டகம் அமைத்துக் கட்டுரை எழுதும் பயிற்சிகளை வழங்குதல்.
- ஒரு விடயம் ஒரு பந்தியில் அமையுமாறு விரித்து எழுதும் திறனை வளர்த்தலும், பந்திகளுக்கிடையேயான தொடர்பினைப் பேணுதலும்.
- சிறுகதைக் கருவுக்குப் பொருத்தமாகக் சிறுகதை எழுத வழிகாட்டுதல். சிறுகதைக்கான கருவினை சரியாக விளங்கிக்கொள்ள நெறிப்படுத்தல்.
- உரையாடல் இயல்பானதாகவும் தர்க்க ரீதியானதாகவும் அமைந்திருத்தல்.
- உரையாடல் நீண்ட பந்திகளாக அமையாதிருக்க வழிப்படுத்தல்.
- உரையாடலில் உரையாடுபவர்களிருவரும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வருவதாக அமைய எழுத வழிப்படுத்தல்.
- வழிகாட்டற் குறிப்பில் தரப்பட்ட பொருத்தமான மொழிநடையில் சிறுகதை எழுதப் பயிற்சி வழங்குதல்.
- சிறுகதையின் நகர்வுக்கேற்ப பாத்திர உரையாடல்கள் இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் அமையுமாறு எழுத வழிகாட்டுதல்.
- கட்டுரைகளை எழுதச்செய்து புள்ளியிடல் மூலம் மாணவர்களின் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தல்.
- விளக்கக்கட்டுரை, உரையாடல், மேடைப்பேச்சு, சிறுகதை ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும் மாணவர்களுக்கு பொருந்தக்கூடிய தலைப்புக்களை தெரிவுசெய்து அவற்றை வாசிக்க வழிப்படுத்தல்.

வினா இல. 3

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

மனிதருக்கு இன்றியமையாமல் இருக்க வேண்டியவை இரண்டு. முதலாவது உள்ளத்து உணர்வு; இரண்டாவது அறிவு. இரண்டும் வளம் பெற்ற ஒருவனே பூரண மனிதனாவான். ஒன்றை வளர்க்காமல் மற்றதை வளர்ப்பதாலே பயனில்லை. அவ்வாறு செய்பவன் முழுமை உடையவன் எனப்படமாட்டான்.

பலமான காற்றடித்தாலும், பிறர் வேகமாகத் தள்ளிவிட நேர்ந்தாலும் இரண்டு கால்களையும் நன்றாக ஊன்றி நிற்பவன் விழமாட்டான். ஆனால், ஒரு காலில் நிற்பவனோ உடன் விழுந்துவிடுவான். அதுபோலவே, உணர்வு, அறிவு என்ற இரண்டு கால்களிலும் நிற்கும் சமுதாயம் ஒருபோதும் விழமாட்டாது. காலம் எனும் பேய்க்காற்றாலும், பிற நாகரிகம் என்ற இடியாலும் தாக்கப்பட்டாலும் அச்சமுதாயம் துளியும் பாதிக்கப்படமாட்டாது. இதற்கு மறுதலையாக, ஒரு காலில் நிற்கும் நிலையேற்பட்ட சமுதாயங்கள் நிலை பெறவில்லை. உணர்வை மட்டுமே பேணிய சமுதாயம் வீழ்ச்சியுற்றது. அறிவையே பெரிதாகக் கருதிய சமுதாயமும் வீழ்ச்சியுற்றது.

மனிதன் அறிவை வளர்ப்பதால் பெறும் பயன்கள் விஞ்ஞானம், அரசியல் முதலியன. இவற்றினால் மனிதனின் புறவாழ்வு சிறப்படைந்தது. வெயிலிலும் மழையிலும் இடருற்ற மனிதன், விஞ்ஞானத்தால் வீடுகட்டி, வண்டி செய்து வாழத் தொடங்கினான். இவையெல்லாம் அறிவின் பயனாக விளைந்தவை. உணர்வின் துணையின்றித் தோன்றிய இவற்றால் ஓரளவு நற்பயன் உண்டு எனினும் தீய பயனும் உண்டு. அறிவை மட்டுமே கொண்டு நடந்த ஆராய்ச்சிகளாலே அணுவைத் துளைக்கும் முயற்சி அணுகுண்டில் போய் முடிந்தது. அறிவோடு உணர்வும் கலந்து வளர்ந்திருந்தால் அணு பற்றிய ஆராய்ச்சி சமுதாய வளர்ச்சிக்கே பயன்பட்டிருக்கும். எனவேதான், சமுதாயத்தில் அறிவோடு உணர்வும் இணைந்து வளர்க்கப்பட வேண்டும் என அறிஞர் அனைவரும் உரத்துக் குரல் கொடுக்கின்றனர்.

Department of Examinations

## 3ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**சுருக்கம்**

- உள்ளத்துணர்வும் அறிவும் வளம்பெற்ற ஒருவனே பூரண மனிதனாவான்.
- உணர்வு, அறிவு என்ற இரண்டையும் பேணும் சமுதாயம் ஒருபோதும் வீழாது.
- காலம், பிறநாகரிகம் என்பவற்றால் தாக்கப்பட்டாலும் அச்சமுதாயம் பாதிக்கப்படமாட்டாது.
- உணர்வு, அறிவு இரண்டில் ஒன்றை மட்டும் பேணிய சமுதாயம் வீழ்ச்சியுற்றது.
- அறிவை வளர்ப்பதால் நன்மைகள் இருந்தாலும் சிலவேளைகளில் அது தீமையில் முடிகிறது.
- எனவே, ஒரு சமுதாயத்தில் அறிவோடு உணர்வும் இணைந்து வளர்க்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| **விடய உள்ளடக்கம்** | - | **06 புள்ளிகள்** |
| **சொல்லளவு** | - | **02 புள்ளிகள்** |
| **மொழிநடை** | - | **02 புள்ளிகள்** |

- **40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.**

- **35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

- **35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.**

- **சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.**


- **சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.**

- **சொற்களை எண்ணும்போது நிதானமாகக் கணக்கிடவும்.**

Examinations Sri Lanka

## 3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

வரைபு 2.11 வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





3 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் இவ்வினாவுக்கு 99% ஆனவர்களே விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,
00-02 வரையான புள்ளி வீச்சில் 6% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 38% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 31% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 31% ஆக இருக்கும் அதேவேளை 6% ஆனோர் 02 அல்லது அதற்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.12 வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த.)

வினாப்பத்திரம் II இன் 3 ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் சராசரி இலகுதன்மை 69% ஆகும். இங்கு புள்ளி வழங்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் 81% ஆன பரீட்சார்த்திகள் சொல்லளவை சரியாகக் கடைப்பிடித்த போதிலும் விடய உள்ளடக்கத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட அடைவுமட்டத்தை 54% ஆன பரீட்சார்த்திகளே பெற்றிருந்தனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படவில்லை.
- மற்றொன்று விரித்துக் கூறி எழுதப்பட்டுள்ளது.
- சொந்த மொழிநடையில் எழுதவில்லை.
- ஒரு பந்தியாக எழுதப்படவில்லை.
- தவிர்க்கப்பட வேண்டிய உதாரணங்கள், பழமொழிகள், போன்றவற்றை எழுதியுள்ளனர்.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சுருக்கத்தில் இடம்பெற்றுள்ள பிரதான கருத்து, துணைக்கருத்துகள் என்பவற்றைக் கிரகித்து எழுத வழிகாட்டல்.
- தரப்பட்ட பந்தியின் சாராம்சத்தைப் புரிந்துகொண்டு சொந்த மொழிநடையில் எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.
- சுருக்கம் எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய பொறிமுறைகளைப் பின்பற்றி எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- எதிர்பார்க்கப்பட்ட சொற்களின் எண்ணிக்கை அளவில் எழுதப் பயிற்சியளித்தல்.
- இலகுவில் இருந்து கடினத்தன்மையான பயிற்சிகளைப் படிப்படியாக வழங்குதல்.

**வினா இலக்கம் 4**

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதன் ஆரம்பத்தில் பச்சை இறைச்சியைத் தின்று பல காலம் வாழ்ந்தான். பின்னர், பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து விலங்குகளைப் பிடித்துப் பழக்கி, தனக்காக அவற்றை வேலை செய்யப் பழக்கினான். இதற்கும் பல காலம் பின்னர்தான், குடும்பம் எனும் அமைப்பை ஏற்படுத்தி வாழத்தொடங்கினான். அன்பையும் அது காரணமாக விட்டுக்கொடுப்பதையும் இவ்வமைப்பு அவனுக்குப் பழக்கியது. இவ்வமைப்பில் அவனுக்குப் புதிய பல அனுபவங்கள் தோன்றின. ஒரு பெண்ணின் நன்மை, தீமைகளில் பங்குகொள்ளத் தொடங்கியதும், இருவருக்கும் பிறந்த புதிய உயிர்களின் குறும்புகளில் ஈடுபடத் தொடங்கியதும், அவனுக்குப் புதியனவாக இருந்தன.

குடும்பங்கள் பல சேர்ந்து வாழத் தொடங்கியபோது சமுதாய வாழ்க்கை உருவானது. இவ்வாழ்வில் சில நன்மைகள் இருந்தன. சில அல்லல்களும் தோன்றின. சேர்ந்து வாழ்ந்தபோது பாதுகாப்பு இருந்தது. இல்லாதவரது போதாமையை மற்றொருவர் வழங்கி இட்டு நிரப்ப முடிந்தது. இவற்றால் ஏற்பட்ட மகிழ்ச்சியால் அவனது சமுதாய வாழ்வு தொடர்ந்தது.

எனினும், சமுதாய வாழ்வால் தனதும், தனது குடும்பத்தினதும் சுதந்திரம் பாதிக்கப்பட்டதை அவன் உணர்ந்தான். மற்றவர்களுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்கவேண்டிய சுமை ஏற்பட்டதையும் அவன் அல்லலாகக் கருதினான். இந்நிலையிலிருந்து விடுபட ஒரேயொரு வழிதான் இருந்தது. அதுதான் ஊர் முழுவதையும் ஒரு குடும்பமாகக் கருதி வாழும் முறை. இம்முறையில் ஓர் ஒப்பற்ற இன்பம் இருப்பதை உணர்ந்த அன்றுதான், மனிதன் தன்னை விலங்கிலிருந்து வேறுபடுத்தி வாழத்தொடங்கினான்.

(i) குடும்ப அமைப்பின் மூலம் மனிதன் பழகிக் கொண்ட நற்பண்புகள் எவை?

(ii) இவ்வமைப்பில் அவன் பெற்றுக்கொண்ட புதிய அனுபவங்களாக இங்கு கூறப்பட்டுள்ளவை யாவை?

(iii) சமுதாய வாழ்வின் நன்மைகள் யாவை ?

(iv) இச்சமுதாய வாழ்வினால் ஏற்பட்ட அல்லல்கள் எவை?

(v) மனிதன் 'விலங்கு வாழ்க்கை'யிலிருந்து எப்போது வேறுபடத் தொடங்கினான்?

## 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

i. – அன்பு
   – விட்டுக்கொடுப்பு

ii. – ஒரு பெண்ணின் நன்மை, தீமைகளில் பங்குகொள்ளத் தொடங்கியமை
   – இருவருக்கும் பிறந்த புதிய உயிர்களின் குறும்புகளில் ஈடுபடத் தொடங்கியமை

iii. – சேர்ந்து வாழ்ந்தபோது பாதுகாப்பு இருந்தமை
   – இல்லாதவரது போதாமையை மற்றொருவர் வழங்கி இட்டு நிரப்பமுடிந்தமை


iv. – தனிமனித சுதந்திரம், குடும்ப சுதந்திரம் பாதிக்கப்பட்டமை
   – மற்றவர்க்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்கவேண்டிய சுமையை உணர்ந்தமை

v. ஊர் முழுவதையும் ஓர் குடும்பமாகக் கருதி வாழும் முறையினால் இன்பம் ஏற்பட்டதை உணர்ந்தபோது...

( 02 × 05 = 10 புள்ளிகள் )

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

வரைபு 2.13 வினாப்பத்திரம் II இன் 4 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,
00-02 வரையான புள்ளி வீச்சில் 8% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 10% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 13% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 70% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 08 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 70% ஆக இருக்கும் அதேவேளை 8% ஆனோர் 02 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அநேகமான வினாக்கள் இலகுதன்மை உடையனவாக அமைந்திருந்தன.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த.)

**வரைபு 2.14** வினாப்பத்திரம் II இன் 4 ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

4 ஆம் வினா ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் பிரிவு (ii) இன் இலகுத்தன்மை 85% ஆக உள்ளதுடன் மற்றைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது பிரிவு (v) வினா இலகுத்தன்மை சற்று குறைவாகவே உள்ளது. இதன் இலகுதன்மை 73% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை :**

- பந்தியை முழுமையாக வாசித்து, கிரகித்து பிரிவு (v) இன் வினாவிற்கு விடையளிக்கத் தவறியமை.
- வினா பிரிவு (v) இல் வழங்கப்பட்ட சொற்பதத்தின் பொருளை விளங்கிக் கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பொருத்தமான உரைநடைப் பகுதிகளைத் தெரிவுசெய்து வினாக்களை வழங்கி விடையெழுதச் செய்வதனூடாக கிரகிக்கும் திறனை விருத்தி செய்தல்.
- நேரடி வினாக்களை மட்டுமன்றி மாணவர்கள் வாசித்து, கிரகித்து விடையளிக்கக்கூடியதான வினாக்களையும், அவற்றுக்கு விடை எழுதும் பயிற்சிகளையும் வழங்குதல்.

வினா இல. 5

**5.** நீண்ட காலமாக நூலகம் இல்லாதிருந்த தமது பிரதேசத்தில் நூலகமொன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை சாந்திபுரம் பிரதேச சபையினர் நிறைவேற்றியுள்ளனர். அப்பிரதேசத்திலுள்ள அறிவொளி சனசமூக நிலையத்தின் செயலாளர் ப.அன்பழகன் என உம்மைக் கருதிக்கொண்டு, பிரதேச சபையின் முடிவைப் பாராட்டி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, அப்பிரதேச சபையின் தவிசாளருக்கு **100** சொற்களில் **கடிதம்** ஒன்று எழுதுக.

- நூலகம் இல்லாத பிரதேசத்தில் நூல்களை வாசித்து அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமை
- நூலகத்தால் பிரதேசத்திற்கு ஏற்படவுள்ள நன்மைகள்
- நூலகம் அமைக்க முன்வந்தமைக்குப் பாராட்டும் நன்றியும்

**அல்லது**

இன்றைய பெருந்தொற்றுக் காலத்தில் தனிமனித சுகாதாரத்தைப் பேணுவதனூடாக, பாதுகாப்பான சூழலைக் கட்டியெழுப்ப முடியும். எனவே, இப்பேரிடர்வேளையில் ஒவ்வொருவரையும் அவதானமாக இருக்கக்கோரி பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியதாக, சாந்திபுரம் இளைஞர் மன்றத்தின் சார்பில் **100** சொற்களில் ஒரு விழிப்புணர்வுத் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

- முகக்கவசம் அணிதல்
- அடிக்கடி கைகளைக் கழுவிக்கொள்ளுதல்
- சமூக இடைவெளியைப் பேணி, கடமைகளில் ஈடுபடுதல்

Department of Examinations - Sri Lanka

## 5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**கடிதம்**

| | | |
|---|---|---|
| – | அமைப்பு | – 05 புள்ளிகள் |
| – | உள்ளடக்கம் | – 07 புள்ளிகள் |
| – | மொழிநடை | – 03 புள்ளிகள் |
| | **மொத்தம்** | **– 15 புள்ளிகள்** |

- **அமைப்பு**

| | | |
|---|---|---|
| – | முகவரி | – 01 புள்ளி |
| – | உள்முகவரி | – 01 புள்ளி |
| – | விளிப்பு | – 01 புள்ளி |
| – | தலைப்பு | – 01 புள்ளி |
| – | பதவி, ஒப்பம் | – 01 புள்ளி |
| | | **05 புள்ளிகள்** |

(தரப்பட்ட தரவுகளுக்கு அமைய முகவரி முதலானவை அமைதல் வேண்டும்.)

- **உள்ளடக்கம்**

1.
   - நூலகம் இல்லாத பிரதேசத்தில் நூல்களை வாசித்து அறிவை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமை
   - வாசிப்பிற்காக பிற இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலை
   - சமூகத்தில் உள்ளவர்கள் பயனுள்ள முறையில் பொழுதைக் கழிக்கும் சந்தர்ப்பமின்மை
   - மாணவர்கள் தாமே நூல்களுக்கு பணம் கொடுத்து வாங்கிப் படிக்கக்கூடிய பொருளாதார வசதி இன்மை

2. **நூலகத்தால் பிரதேசத்திற்கு ஏற்படவுள்ள நன்மைகள்**

- தகவல்களை அறிதல்
- அறிவு மேம்பாடடைதல்
- பயனுள்ள வகையில் பொழுதைக் கழித்தல்
- வாசிப்புப் பழக்கம் மேம்பாடடைதல்
- சமூக வளர்ச்சி

3. **பாராட்டும் நன்றியும்**

பிரதேச சபையின் பொருத்தமான நடவடிக்கை குறித்து மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தல்

◆ மொழிநடை

- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தக்குறிப்பிரயோகம்
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல்

**அல்லது**

**துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| – அமைப்பு | – | 05 புள்ளிகள் |
| – உள்ளடக்கம் | – | 07 புள்ளிகள் |
| – மொழிநடை | – | 03 புள்ளிகள் |
| **மொத்தம்** | **–** | **15 புள்ளிகள்** |

◆ அமைப்பு

| | | |
|---|---|---|
| – கவர்ச்சிகரமான தலைப்பு | – | 02 புள்ளிகள் |
| – விளிப்பு | – | 01 புள்ளி |
| – வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | – | 02 புள்ளிகள் |
| | **–** | **05 புள்ளிகள்** |

(தரப்பட்ட தகவல்களுக்கு அமைய வெளியிடுபவர் விபரம் அமைதல் வேண்டும்.)

◆ உள்ளடக்கம்

- ஓவ்வொருவரும் தம்மைப் பேணுதலின் அவசியம்
- ஓவ்வொருவரும் தம்மைத்தாமே பாதுகாத்தலின் வாயிலாகவே சமூகத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.
- 'பேரிடர்வேளை' என்பதை உணர்ந்து செயற்படல்
- பேணவேண்டிய முறைகள்
  - ✔ முகக் கவசம் அணிதல்
  - ✔ அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளுதல்
  - ✔ சமூக இடைவெளியைப் பேணி, கடமைகளில் ஈடுபடுதல் போன்றன தொடர்பான விளக்கம்

◆ மொழிநடை


- கவர்ச்சியான மொழி நடை
- பொதுமக்களை விளித்து எழுதுதல்
- சூழ்நிலையின் அபாயத்தை வெளிப்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாடு
- சொற்செறிவு

**( 15 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

**5 ஆம் வினாவிற்கு விடையளித்ததுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**

வரைபு 2.15 வினாப்பத்திரம் II இன் 5 ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்





இவ்வினாவும் கட்டாய வினாவாக இருந்தபோதிலும் 98% ஆனவர்களே இதற்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00-03 வரையான புள்ளி வீச்சில் 9% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 22% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 27% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 12 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 27% ஆக இருக்கும் அதேவேளை 9% ஆனோர் 03 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.16 வினாப்பத்திரம் II இன் 5 ஆம் வினாவுக்கான பிரிவுகளின் இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த.)

5 ஆம் வினா இரண்டு தெரிவுகளைக் கொண்டது. இவற்றுள் முதலாவது தெரிவான 'கடிதம் எழுதுதல்' இலகுதன்மை கூடியதாகவும் 'துண்டுப்பிரசுரம் எழுதுதல்' இலகுதன்மை குறைந்ததாகவும் காணப்படுகின்றது. கடிதம் எழுதுதல் தெரிவின் சராசரி இலகுதன்மை 63% ஆகும். 'துண்டுப்பிரசுரம் எழுதுதல்' தெரிவின் சராசரி இலகுதன்மை 53% ஆகும். 46% ஆன பரீட்சார்த்திகள் மாத்திரமே 'துண்டுப்பிரசுரம் எழுதும்' அமைப்பு தொடர்பான சரியான விளக்கத்தைப் பெற்றிருந்தனர். இதன் அடைவுமட்டம் குறைவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- **கடிதம்**
  - அமைப்பு முறையைப் பேணி எழுதத்தவறியுள்ளமை.
  - உள்ளடக்கத்தைச் சரியாகப் பேணி எழுதத் தவறியுள்ளமை.

- **துண்டுப்பிரசுரம்**
  - அமைப்பு முறையைப் பேணி எழுதத்தவறியுள்ளமை.
  - மொழிநடை சிறப்பாக அமையப்பெறாமை

**அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- **கடிதம்**
  - மாதிரி தொழின்முறைக் கடிதங்களை எழுதச் செய்து பயிற்சியளித்தல்.
  - தொழில்முறைக் கடிதத்தில் இடம்பெறும் உறுப்புக்களான உள்ளடக்கம், மொழிநடை போன்ற முறைகளை விளக்கிப் பயிற்சியளித்தல்.

- **துண்டுப்பிரசுரம்**
  - துண்டுப்பிரசுரத்தின் அமைப்பை அனுசரித்து எழுதப் பயிற்சியளித்தல்.
  - 100 சொற்களில் அமையுமாறு எழுதப் பயிற்சியளித்தல் வேண்டும்.
  - வெவ்வேறு தலைப்புகளில் துண்டுப்பிரசுரங்கள் எழுதுவதற்கான பயிற்சி வழங்குதல்.

### 2.2.5.3 வினாப்பத்திரம் II இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் ஆலோசனைகள்

- ⋆ மாணவர்கள், வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாகவும் தெளிவாகவும் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

- ⋆ இவ்வினாத்தாள் 5 வினாக்களை கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

- ⋆ குறுவிடை வினாக்கள் இப்பகுதியில் முதலாம் வினாவாக இடம்பெறும்.

- ⋆ இரண்டாம் வினா கட்டுரை எழுதுவது தொடர்பானதாகும். மாணவர்கள் கொடுக்கப்பட்ட நான்கு கட்டுரைகளின் வழிகாட்டற் குறிப்புகளை நன்கு வாசித்து தனக்கு எழுதுவதற்கு வாய்ப்பான விடயத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்.

- ⋆ கட்டுரை எழுதும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு எழுதவேண்டும்.
  - பொருள் அமைவும் அளவும்
  - கருத்து வெளிப்பாடும் அளவும்
  - எழுத்து நுட்பங்கள் (பந்தி அமைப்பு, பந்திகளிடையேயான தர்க்கரீதியான தொடர்ச்சி, குறியீடுகள், உறுப்பமைவு, நேர்த்தி)
  - பொருத்தமான தலையங்கம்
    (குறைந்த சொற்களைக் கொண்ட கவர்ச்சியான தலைப்பு)

- ⋆ சுருக்கம் எழுதும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
  - பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் இனங்காணப்படல்.
  - சொந்த மொழிநடையில் எழுதுதல்.
  - பிரதான அம்சங்களை அனுசரித்து கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
  - ஒரு பந்தியாக எழுதுதல்.
  - குறித்த சொல்லளவில் எழுதுதல்.
  - தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல்.

- ⋆ கிரகித்தல் வினாவிற்கு விடையளிக்கும்போது கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியை நன்கு வாசித்து, கிரகித்து மிகச்சரியான விடையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் சுட்டிப்பாகவும் எழுத வேண்டும்.

- ⋆ 5 ஆம் வினாவில் இரு தெரிவு வினாக்கள் வழங்கப்படும். மாணவர்கள் இரு வினாக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து எழுத வேண்டும். தமக்கு மிகப் பரிச்சயமான விடயத்தை தெரிவுசெய்து எழுதுதல் நன்று.
  கடிதம், அறிக்கை, துண்டுப்பிரசுரம், விளம்பரம் ஆகியவற்றை எழுதுவதற்கான பயிற்சிகளை வழங்குதல் வேண்டும்.

- ⋆ அவதானிக்க வேண்டிய விடயங்களை அனுசரித்து எழுதுதல் வேண்டும்.
  - அமைப்பு
  - பொருட் பொருத்தம்
  - மொழிநடை

- ⋆ ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை எழுதும்போது விடைத்தாளில் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

- ⋆ விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

- ⋆ விடை எழுதும்போது வினா இலக்கத்தையும் பகுதி வினா இலக்கங்களையும் தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடல் வேண்டும்.

## 2.3. வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.3.1 வினாப்பத்திரம் III - இன் கட்டமைப்பு

**நேரம் :- 2 மணித்தியாலங்கள்** **மொத்தம்: 80 புள்ளிகள்**

(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கிய பாடநூல்)

(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)


1. குறுவிடை வினாக்கள் 10.
   (ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த ஐந்து உபபகுதிகள்.
   (ஒரு உபபகுதிக்கு 4 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)
3. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
4. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (10 புள்ளிகள்)

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள் = 20+20+15+15+10**

**= 80 புள்ளிகள்**

### 2.3.2 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்

வரைபு 2.17 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்





முதல் நான்கு வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானது. எனினும் வரைபின் அடிப்படையில் முதலாம் வினாவுக்கு 99% ஆனோரும், இரண்டாம் வினாவுக்கு 98% ஆனோரும், மூன்றாம் வினாவுக்கு 97% ஆனோரும் நான்காம் வினாவுக்கு 95% ஆனோருமே விடையளித்துள்ளனர்.

5,6,7ஆகிய வினாக்கள் தெரிவு வினாக்களாகும். இவற்றுள் 5ஆம் வினாவை 60% ஆனோரும், 6ஆம் வினாவை 21% ஆனோரும் 7 ஆம் வினாவை 16% ஆனோரும் தெரிவுசெய்துள்ளனர்.

**மூலம்:** RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த

### 2.3.3 வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்கான இலகுதன்மைச்சுட்டிகள்

**வரைபு 2.18** வினாப்பத்திரம் III இல் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய உப பிரிவுகளுக்குமான இலகுதன்மைச்சுட்டிகள்





**மூலம்:** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

மேலுள்ள வரைபின் அடிப்படையில் வினாப்பத்திரம் III இல் இலகுதன்மை கூடிய வினா, வினா இலக்கம் 1 இன் உப பிரிவு (i) (ஆ) ஆகும். இதன் இலகுதன்மை 88% ஆகும். அதேபோல இலகுதன்மை குறைந்த வினா, வினா இலக்கம் 1 இன் உப பிரிவு (vii) (ஆ) ஆகும். அதன் இலகுதன்மை 10% ஆகும்.

**2.3.4 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்**

வரைபு 2.19 வினாப்பத்திரம் III இன் வினாக்களுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்
(புள்ளிகளின் வீச்சுக்கேற்ப)




**மூலம்: (**RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். புள்ளி வீச்சு 00% - 25% க்கு இடையில் (0-5 புள்ளிகள்) 25% ஆனோரும், புள்ளிவீச்சு 26% - 50% க்கு இடையில் (6-10 புள்ளிகள்) 36% ஆனோரும், புள்ளிவீச்சு 51% - 75% க்கு இடையில் (11-15 புள்ளிகள்) 31% ஆனோரும், புள்ளி வீச்சு 76% - 100% க்கு இடையில் (16-20 புள்ளிகள்) 8% ஆனோரும் பெற்றுள்ளனர்.

### 2.3.5 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வு

#### 2.3.5.1 வினாப்பத்திரம் III இன் பகுப்பாய்வுச் சுருக்கம்

வினாப்பத்திரம் III பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடநூலின் அடிப்படையிலான இலக்கிய அறிவைப் பரீட்சித்தலை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வினாப்பத்திரம் கட்டாய வினாக்களையும் தெரிவு வினாக்களையும் கொண்டது.

வினாப்பத்திரம் III ஆனது தேரச்சி மட்டங்கள் 1.3, 2.1, 7.1, 12.2 என்பவற்றோடு தொடர்புடையது. இதன்மூலம் முறையே கேட்டுக் கிரகித்தவற்றை செம்மையாகக் கூறுதல், தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுதல், படைப்புகளை நயந்து வாசித்தல், சொற்றொடர்களையும் அவற்றின் பொருளையும், வகையையும் செம்மையாக அறிந்து பிரயோகித்தல் என்பவற்றுக்கான அடைவுமட்டங்கள் பரீட்சிக்கப்படுகின்றன.

இலக்கியப் பாடத்தோடு தொடர்புடைய 1வது வினாவான குறு வினாக்களுக்கும் 2 வது வினாவான செய்யுட் பகுதிகள் மற்றும் உரைநடைப் பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கும் சரியாக விடையளிப்பதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர். பாடல் அடிகளைச் சந்திபிரித்து சொற்களுக்குகான பொருளை விளங்கிக்கொள்ளாமை, செய்யுள்களின் விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமை, அடிகளில் குறிப்பிடப்படும் பாத்திரங்களின் செயல், தன்மை என்பவற்றை விளங்கிக்கொள்ளாமை, பாடல்களின் உட்கருத்து, பாடுபவரின் திறம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை அறியத் தவறியமை, பாடலில் வெளிப்படுத்தப்படும் விடயங்களைப் பகுத்து அறிந்துகொள்ளாமை, உரைநடைப் பகுதிகளில் தரப்பட்ட பந்தியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு விடையளிக்கத் தவறியமையை இவற்றுக்கான பிரதான காரணங்களாக அறியப்படுகின்றன.

மேலும் வினா இலக்கம் 3 முதல் 7 வரை விளக்க வினாக்களுக்கு விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் பொருத்தமானதாக விடைகளைக் கட்டமைப்புடன் எழுதத் தவறியுள்ளனர். இலக்கியச் சுவை புலப்படும் வகையில் விடைகளை நயந்து எழுதாமல் சிறுகுறிப்புகளாக எழுதியுள்ளனர். வினாவுக்குப் பொருத்தமான முறையில் செய்யுட் பகுதிகளையோ, கட்டுரை, சிறுகதைப் பகுதிகளையோ மேற்கோள்காட்டி விளக்கி எழுதத் தவறியுள்ளனர்.

இலக்கியப் பாடப்பரப்புக்கான அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கு கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தவேண்டும். இலக்கியப் பாடத்தில் பரீட்சார்த்திகள் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகள் என்பவற்றில் சொற்களின் பொருள்களை விளக்கிக்கொள்ளச் செய்யும் வகையிலும், செய்யுட் பகுதிகளில் சொற்களின் கருத்துகளையும் பாடல்களைச் சந்திபிரித்து பொருள்களை விளங்கிக்கொள்ளச்செய்யும் வகையிலும் கற்றல் - கற்பித்தல் மேற்கொள்ளப்படவேண்டும். இலக்கிய உரைநடைப் பகுதிகளை இலக்கிய இரசனையுடன் கற்பிக்க வேண்டும்.

## 2.3.5.2 வினாப்பத்திரம் III இன் ஒவ்வொரு வினாக்களிலும் விடையளிக்கப்பட்டுள்ள விதம் தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் ஆலோசனைகளும்

வினா இல. 1

**1.** சுருக்கமான விடை தருக.

(i) "தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டுகம்"

(அ) 'தண்டேன்' என்பதைப் பிரித்து எழுதுக.

(ஆ) இங்கு 'மண்டுகம்' எனக் குறிப்பிடப்படுவது யாது?

(ii) "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தபாற்தந்திக் கட்டுக்களை"

(அ) இவ்வாறு கூறியவர் யார்?

(ஆ) அதனை அவர் யாருக்குக் கூறினார்?

(iii) "ஓடி மண்டை பற்றிப் பரபரெனும் பாரில் பிண்ணாக்கு முண்டாம்."

(அ) 'பிண்ணாக்கு' என்ற சொல் இரு பொருள்பட வருமாற்றை விளக்குக.

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(iv) "கண்ணார் அல்லாமேல் ஆணை உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி"

(அ) இங்கு 'ஆணை' என்பது எதனைக் குறிப்பிடுகிறது?

(ஆ) 'அடையாட்டி' என்ற சொல் குறிக்கும் பொருள் யாது?

(v) "அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை நோக்கி,
ஐய அன்பின் நிறைந்தாளை உரை"

(அ) 'அயல் நின்றாள்' எனக் குறிப்பிடப்படுபவள் யார்?

(ஆ) 'ஐய' என விளிக்கப்படுபவன் யார்?

(vi) "தனித்து நின்றும் சத்தியத்தால் தலை நிமிரும் மனிதன்.
தற்பெருமை கொள்ளாது தலை தாழும் அறிஞன்."

(அ) மனிதன் தலை நிமிர்வது எதனால்?

(ஆ) 'தலை தாழும்' என்பதன் உட்கருத்து யாது?

(vii) "பார்ப்பனர், மொழிபெயர் தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள்."

(அ) இதனூடாக வெளிப்படும் தமிழ்மக்களுடைய மனப்பான்மை யாது?

(ஆ) 'மொழிபெயர் தேயத்தார்' என்ற தொடர் யாரைக் குறிக்கிறது?

(viii) "பூத்தஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்."

(அ) காதலியின் முக அழகு எவ்வாறு விபரிக்கப்படுகிறது?

(ஆ) காதலியின் பார்வையால் கவிஞர் தான் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு விபரிக்கிறார்?

(ix) "வயிரம் எனும் சுடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன

செயிர் அமரில் வெகுளிபொர சேர இரு திறத்தேமும் சென்று மாள்வோம்."

(அ) இங்கு 'வரை' எனப்படுவது யாது?

(ஆ) 'இருதிறத்தேமும்' எனச் சுட்டப்படும் இரு பகுதியினரும் யாவர்?

(x) "அரவ நெடுங்கடல் ஆடை அவனி எல்லாம்."

(அ) இங்கு 'அரவம்' என்பதன் பொருள் யாது?

(ஆ) பூமி எதனை ஆடையாக அணிந்துள்ளது?

(20 புள்ளிகள்)

1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**சுருக்க விடை** **வினா 7 இன் பிரிவுகள்**

**01. சுருக்கமான விடை தருக.**

i. அ. தண் + தேன் / தண்மை + தேன்
   ஆ. தவளை / நுணல்

ii. அ. நாவலர்
   ஆ. விசுவநாதபிள்ளை / கைலாசபிள்ளை

iii. அ. பிண்ணாக்கு (எண்ணெய் எடுத்து எஞ்சிய தானியச் சக்கை) , பிளவுண்ட நாக்கு
   ஆ. சிலேடை

iv. அ. சத்தியம் செய்தல்
   ஆ. திருமணம் செய்யாதுவிடில்

v. அ. சுமித்திரை
   ஆ. பரதன்

vi. அ. சத்தியத்தால்
   ஆ. பணிதல்

vii. அ. உலக மனப்பான்மை
   ஆ. வேற்றுமொழி பேசுகின்ற நாட்டவர்

Department of Exami

viii. அ. மலர்ந்த ஒளி பொருந்திய முகம் (பூத்த ஜோதி வதனம்)
ஆ. புத்துயிரெய்தியதாகக் கூறுதல்
(புலன் அழிந்து ஒரு புத்துயிர் எய்தினேன் / புத்துயிர் எய்தினேன்)


ix. அ. வரை – மூங்கில்
ஆ. பாண்டவர், கௌரவர்

x. அ. ஓசை / ஒலி
ஆ. கடல்

( 2 x 10 = 20 புள்ளிகள் )

**1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

வரைபு 2.20 வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





1 ஆம் வினா கட்டாய வினாவாகும். எனினும் 99% ஆனோரே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர் இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும். இதில்,
00-05 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
06-10 வரையான புள்ளி வீச்சில் 36% ஆனோரும்
11-15 வரையான புள்ளி வீச்சில் 31% ஆனோரும்
16-20 வரையான புள்ளி வீச்சில் 8% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 8% ஆனோர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 25% ஆனோர் 5 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.

**மூலம்**: RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த

வரைபு 2.21 வினாப்பத்திரம் III இன் 1ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

இவ்வினாவில் 10 பிரிவுகளும் ஒவ்வொரு பிரிவுக்கும் 2 உப பரிவுகளும் காணப்படுகின்றன. அவற்றுள் இலகுவான வினாவாக (i) (ஆ) காணப்படுகிறது. இதன் இலகுதன்மை 88% ஆகும். (iv) (ஆ), (v) (அ) (ஆ), (vi) (ஆ), (vii) (அ),(ஆ), (ix)(அ)(ஆ), (x)(அ) ஆகியன இலகுதன்மை குறைந்த வினாக்களாகும். இவற்றின் இலகுதன்மை 40% இலும் குறைவாகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

iv. நாட்டார் பாடலில் வரும் "அடையாட்டி" எனும் சொல்லினுடைய பொருளை விளங்கிக்கொள்ளாமை.

v. அறந்தானே என்கின்ற "அயல் நின்றாள் தனை நோக்கி ஐய அன்பின் நிறைந்தாளை உரை"என்ற குகப் படல பாடலடியின் பொருளை சரியாக விளங்கிக்கொள்ளாமை காரணமாக "அயல் நின்றாள்" எனக் குறிப்பிடப்படுபவள் யார்? என்ற வினாவிற்கு 35% வீதமானோரே சரியான விடையினை எழுதியுள்ளனர். இதன் (ஆ)பகுதிக்கும் 39% வீதமான பரீட்சார்த்திகளே சரியான விடையளித்துள்ளனர்.

vi. கவிதைகளைப் படிக்கும்போது அதன் உட்கருத்துக்களை சரியான முறையில் விளங்கிக் கொள்ளாததன் காரணமாக தலை தாழும் என்பதன் உட்கருத்து யாது என்ற வினாவிற்கு 15% வீதமான பரீட்சார்த்திகளே சரியான விடையினை அளித்துள்ளனர்.

vii. இலக்கியக் கட்டுரைகளை ஆழமாக வாசித்து அதன் உட்கருத்தினை விளங்கிக்கொள்ளாமை

ix. பாடலை சந்தி பிரித்து அரும்பதங்களுக்கான பொருளை விளங்கிக்கொள்ளாததன் காரணமாக "வரை" "இருதிறத்தேமும்" "அரவம்"என்ற சொற்களுக்கான வினாக்களுக்கு சரியான விடையளிக்காமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பாடலையோ கவிதையையோ கற்பிக்கும்போது பாடலின் பொருள், அதன் புலப்பாட்டுத் தன்மை, சொற்கள், இடம்பெற்ற சந்தர்ப்பம், அணிகள் என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- பாடலின் பொருளைத் தெளிவாக விளங்கிக்கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாளுதல்.
- பாடல்களில் இடம்பெறும் அருஞ்சொற்கள், சொற்றொடர்களுக்குப் போதிய விளக்கமளித்தல். உ.ம்: அடையாட்டி, அயல்நின்றாள், ஐய, தலைதாழும், வரை
- இலக்கியக் கட்டுரைகளைக் கற்பிக்கும்போது அவற்றின் உட்கருத்துக்களை ஆழமாக விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்.
- பாடலை சந்தி பிரித்து கொண்டு கூட்டி எழுதவும் வாசிக்கவும் வழி செய்தல்.

## வினா இல. 2

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

(அ) இப்பாடல் உணர்த்தும் நீதி யாது?

(ஆ) புலவர் தாம் கூற விரும்பிய கருத்தைப் புலப்படுத்தக் கையாண்ட உதாரணத்தை விளக்குக.

(ii) பங்கப் பழனத் துழுமுழவர்

புலவின் கனியைப் பறித்ததென்று

சங்கிட் டெறியக் குரங்கிளநீர்

தனைக் கொண்டெறியுந் தமிழ்நாடா

கொங்கர்க் கமராபதியளித்த

கோவே யிராச குலதிலகா

வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும்

மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

(அ) இங்கு தமிழ்நாடனின் வீரம் எவ்வாறு விபரிக்கப்பட்டுள்ளது?

(ஆ) தலைவியின் ஆற்றாமை எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

(iii) ஆழப் புதைந்த

தேயிலைச் செடியின்

அடியிற் புதைந்த

அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும்

ஏறி மிதித்து

இங்கெவர் வாழவோ

தன்னுயிர் தருவன்

என்னே மனிதர்

இவரே இறந்தார்க்கு

இங்கோர் கல்லறை

எடுத்திலர்! வெட்கம்

தன்னை மறைக்கத்

தானோ அவ்விறைவனும்

தளிர் பசும் புல்லால்

தரை மறைத்தனனோ!

(அ) தோட்டத் தொழிலாளரின் உழைப்பு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

(ஆ) 'வெட்கம் தன்னை மறைக்கத்தானோ அவ்விறைவனும் தளிர் பசும்புல்லால் தரை மறைத்தனனோ!' என்ற தொடர் மூலம் கவிஞர் கூற விழைவது யாது?

(iv) "சமூகத்திலுள்ள பலர் தத்தம் இயல்புக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகுவதாலோ, கடைப்பிடித்தொழுக முயலுவதாலோதான் உலகம் இனிமை தருகின்றது. இலட்சியமில்லையேல் உலகு இனிமை தராது. பண்பில்லாதவனுக்கு அவன் பெற்ற அறிவும் துன்பமாம். ஈகையில்லாதவனுக்கு அவன் பெற்ற செல்வமும் துன்பமாம். பிற நற்பேறுகளும் இவ்வாறே. சமூகத்தை உருவாக்கி அதனை அழகு செய்து இன்பப்பயன் காணச்செய்கின்ற இலட்சியம் சமூகமாகிய உடலுக்கு உயிராக அமைந்துள்ளது."

(அ) அறிவின் இலட்சியம் யாது? செல்வத்தின் இலட்சியம் யாது?

(ஆ) இங்கு காணப்படும் **இரண்டு** உருவகங்களையும் எடுத்துக்காட்டுக.

(v) “மூத்தம்மா என்ற மகாராணியின்கீழ் இருப்பதில் என்றுமில்லாத கர்வம் சுரந்தது. எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு. விலாவிரண்டிலும் சிறகுகள் முளைத்து காற்றினிலே எம்பத் தொடங்கி விட்டேன். என் மிதமிஞ்சிய ‘பயந்தாங்கொள்ளி’ பட்டத்தை நான் எரித்தாயிற்று. நெஞ்சினுள் கலர் கலராய் வண்ணப் பூக்கள் காடாய் அடர்ந்தன.”

(அ) இதைக் கூறுபவரின் குதூகல உணர்வு எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது?

(ஆ) மூத்தம்மாவின் ஆளுமை இங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?

(20 புள்ளிகள்)

## 2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

i. அ. அடங்கியிருத்தல் அறிஞரது இயல்பு. ஆதலால், அடக்கமுடையவரை அறிவில்லாதவர் எனக் கருதி அவரை வெல்வதற்கு நினைக்க வேண்டாம்.

ஆ. வாய்க்காலில் மீன்பிடிக்கக் காத்திருக்கும் கொக்கு, பெருமீன் கிடைக்கும்வரை, சிறுமீன்களைக் கவராது அவற்றை ஓடவிட்டு, அடக்கமாக / அமைதியாகக் காத்திருக்கும். அதுபோலவே அடக்கமுடையார் அடங்கி இருப்பார். ஆயின், உரிய நேரத்தில் தம் அறிவை, ஆற்றலை வெளிப்படுத்துவர்.

ii. அ. கொங்கு தேசத்தவர்களைப் போரில் வென்று அவர்களுக்கு விண்ணுலகம் கொடுத்த (அவர்களை மாய்த்த) அரசர்க்கெல்லாம் அரசனே எனக் கூறுவதனூடாக

ஆ. மாலைக்காலத்தில் இளம்பிறைச் சந்திரனைக் கண்டும் (காதல் தெய்வமான) கரும்பு வில்லையுடைய மன்மதனால் வருத்தப்பட்டும் (காதல் நோயால்) மெலிந்த அவளது கண்கள் நீரைச் (கண்ணீரை) சொரிந்தன.

iii. அ. ஆழமாகப் புதைத்த தேயிலைச் செடியின் அடியில் தனது தந்தையாரின் உடல் புதைக்கப்பட்ட சிதையில் ஏழை மகனொருவன் ஏறி மிதித்து தேயிலைக் கொழுந்தினைப் பறிக்கின்றான். எவர் வாழ்வதற்கோ தன் உயிரை வருத்தி உழைக்கின்றான்.

ஆ. – இறந்தவர்க்குக் கல்லறை எடுக்காதமை வெட்கத்துக்குரிய விடயம்

– இயல்பாகவே புதைமேட்டில் புல் படர்ந்துள்ளமையை, வெட்கப்படத்தக்க அந்தச் செயலை மறைப்பதற்கு கடவுள் செய்த செயலாகக் (தற்குறிப்பேற்றமாக) கவிஞர் கற்பனை செய்கிறார்.

iv. அ. – அறிவின் இட்சியம் பண்புள்ளவனாக வாழ்தல்

– செல்வத்தின் இலட்சியம் ஈகைக் குணம் உள்ளவனாக இருத்தல்

ஆ. – சமூகம் உடலாக உருவகிக்கப்பட்டுள்ளது.

– இலட்சியம் உயிராக உருவகிக்கப்பட்டுள்ளது.

v. அ. – மூத்தம்மாவோடு இருப்பதில் கர்வம் சுரந்தது

– சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு

– விலாவிரண்டிலும் சிறகுகள் முளைத்து காற்றிலே எழும்புவதாக உணர்தல்

– நெஞ்சினுள் கலர் கலராய் வண்ணப்பூக்கள் காடாய் அடர்தல்

Department of Examinations - Sri Lanka


ஆ. – பயந்தாங்கொள்ளியாக இருந்த காசிம், மூத்தம்மாவின்கீழ் இருந்ததால் 'பயந்தாங்கொள்ளி' என்ற தனது பட்டத்தை எரித்ததாகக் கூறுவதன் ஊடாக

– மூத்தம்மாவை 'மகாராணி' யாகக் கருதுவதனூடாக

**( 4 x 5 = 20 புள்ளிகள் )**

**2 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

**வரைபு 2.22** வினாப்பத்திரம் III இன் 2 ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




2 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 98% ஆனோரே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இதன் மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.


இதில்,

00-05 வரையான புள்ளி வீச்சில் 29% ஆனோரும்
06-10 வரையான புள்ளி வீச்சில் 31% ஆனோரும்
11-15 வரையான புள்ளி வீச்சில் 28% ஆனோரும்
16-20 வரையான புள்ளிவீச்சில் 12% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 12% ஆனோர் 16 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 29% ஆனோர் 5 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.23 வினாப்பத்திரம் III இன் 2 ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

இரண்டாம் வினா 5 பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் உப பிரிவுகள் (iv) (அ) இன் முதற்பகுதி இலகுதன்மை கூடிய வினாவாகவும், (iv) (ஆ) இலகுதன்மை குறைந்த வினாவாகவும் காணப்படுகின்றது. இவற்றின் இலகுதன்மை முறையே 71%, 17% ஆகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- வினா இலக்கம் 02 (ii) (ஆ) பகுதியில் தலைவியின் ஆற்றாமையை சரியாகப் புரிந்து சித்திரிக்கத்தெரியாமை.
- (iv) ஆவது வினா இலட்சியமும் சமநோக்கும் பாடப்பகுதியோடு தொடர்புடையது. இவற்றில் (அ) பகுதியில் அறிவின் இலட்சியம் வினாவிற்குப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடையளித்தாலும் செல்வத்தின் இலட்சியத்தை இனங்காண்பதற்கு இடர்பட்டதோடு (ஆ) பகுதியில் உருவகங்களையும் இனங்காண்பதில் இடர்பட்டனர்.
- வினா இல (v) உப பிரிவு (ஆ) பகுதியில் மூத்தம்மாவின் ஆளுமை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது தென்பதனை இனங்காணத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- உரைநடைப் பகுதிகளைக் கற்பிக்கும்போது அவற்றில் இடம்பெறும் முக்கியமான சொற்கள் சொற்றொடர்களை எடுத்துக்காட்டி விளக்குவதுடன் அவற்றை அறிவதில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- உரைநடைப் பகுதிகளில் வரும் சம்பவங்கள், உரையாடல்கள் மூலம் அவற்றை எழுதிய ஆசிரியர் வெளிப்படுத்த விரும்பும் விடயங்கள் பற்றி பரீட்சார்த்திகளுடன் கலந்துரையாடி விளக்குதல்.
- பாடல்களின் பொருட்சிறப்புகளை அறிந்துகொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல்.
- பாடலை சந்திபிரித்து விளங்கிக்கொள்ளும் திறனை வளர்த்தல்.
- பாடலில் கையாளப்பட்டுள்ள அணிகளையும் அதன் பொருட்பொருத்தப்பாட்டினையும் மாணவர்களுடன் கலந்துரையாடி விளக்குதல்.

**வினா இல.** 3

**3. தத்தைவிடு தூது** என்ற இலக்கியத்தில்,

(அ) காதலிமீது தலைவனின் காதல் உணர்வு

(ஆ) பெண்களின் அன்றைய சமுதாய நிலைமை

ஆகியன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**குற்றாலக் குறவஞ்சி** யில்,

(அ) மலைச் சிறப்பு

(ஆ) நாட்டுச் சிறப்பு

ஆகியன விபரிக்கப்படுமாற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

3 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(அ) **காதலியை உணர்வுபூர்வமாக பலவகையில் வர்ணித்தல்**

- என்னிரு கண்மணியாள்
- அன்னநடை மைவிழியாள்
- இதயத்தில் வீற்றிருக்கும் இலக்குமி

**காதலிமீதான தன் அன்பின் ஆழத்தையும் உரிமையையும் வெளிப்படுத்தல்**

- அவளுக்கு ஏற்ற மணாளன்தானே எனல்
- தன்னை அவள் விரும்பாவிடில் சன்னியாசியாவேன் எனல்
- அவளை அடையாவிடில் உயிர் விடுவேன் எனல்
- அவளுக்குப் பழிவந்துவிடலாகாது என்பதால் உயிர்விடும் எண்ணத்தைத் தவிர்த்தல்
- அவளே தனக்கு அடைக்கலம் (சரணம்) எனல்
- அவள் தன்னிடம் வந்தால் வானுலகத்து இன்பம் எல்லாம் வரும் எனக் கூறுதல்

**(7 புள்ளிகள்)**

(ஆ)
- பெண்ணின் விருப்பம் இன்றியே அவளுக்குக்குப் பொருத்தமற்ற ஒருவனை ஆண் என்ற ஒரு காரணத்தாலேயே திருமணம் செய்து வைத்தல்
- சுதந்திரம் அற்றவர்களாகப் பெண்களை வீட்டில் அடைத்து வைத்தல்
- அடிமைகளாக மிருகங்களைப் போல நடத்துதல்
- கல்வி உரிமையை மறுத்தல்
- உண்பது, உறங்குவது, ஊர்க்கதை பேசுவது, கணவனைத் தொழுவது என்பவையே பெண்களின் தொழில்கள் எனக் கருதுதல்

**(8 புள்ளிகள்)**

**(7 + 8 = 15 புள்ளிகள்)**

**அல்லது**

(அ)
- **மலைச் சிறப்பு**
  - விலங்குகள் இன்பமாக வாழ்தல்
  - கானவரும் வானவரும் தொடர்புகொள்ளும் அளவுக்கு, வீழும் அருவியால் செங்கதிரோனது தேர்க்காலும் பரிக்காலும் வழுக்கும் அளவுக்கு செண்பக மலரின் வாசம் வானுலகில் பரவும் அளவிற்கு மலை உயரமாக இருத்தல்
  - கவனசித்தர் காயசித்தி விளைத்தல்
    - ✔ அருவி கழங்கென முத்துக்களைச் சொரிதல், பெண்கள் இயற்றிய சிற்றிலை அழித்துச் செல்லுதல்
  - செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
  - குறும்பலவீசர் குடியிருப்பது **(7 புள்ளிகள்)**


(ஆ) **நாட்டுச் சிறப்பு**

- எருமைகள் தாமாவே தொடர்ந்து பால் சொரிதல்
- வாழை, பலா, தாழை மரங்கள் காணப்படுதல்
- மாதம் மும்மாரி பொழிதல்
- வருடம் மூன்று விளைவுள்ளமை
- சமயநெறி முறைகள் பிழையாது நடத்தல்
- மூவுலகால் வலஞ் செய்யப்படுதல்
- அங்கு பிறந்தவர், வாழ்பவர், இறப்பவர் அனைவருக்கும் புண்ணியம் கிடைத்தல்
- செந்நெல், கன்னல், மாம்பழம், தயிர், மலர், பேரிகை ஆகியவற்றால் சிறப்படையும் நாடு
- குற்றால நாதர் குடியிருக்கும் நாடு **(8 புள்ளிகள்)**

**(7 + 8 = 15 புள்ளிகள்)**

**3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :**


வரைபு 2.24 வினாப்பத்திரம் III இன் 3 ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




3 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 97% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும். இதில்,
00-03 வரையான புள்ளி வீச்சில் 38% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 21% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 21% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.
இவ்வினாவுக்கு 38% ஆனோர் 3 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 20% ஆனோர் 12 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.25 வினாப்பத்திரம் III இன் 3 ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

3 ஆம் வினா இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்தி விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதி தொடர்பாக, உப பிரிவு (அ) விற்கு 28% ஆனவர்களும் (ஆ) விற்கு 35% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். இரண்டாம் பகுதி தொடர்பாக, உப பிரிவு (அ) விற்கு 53% ஆனவர்களும் (ஆ) விற்கு 49% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். முதற் பகுதி (அ), (ஆ), ஆகிய உப பிரிவுகளுக்கு 40% இற்குக் குறைந்த பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- "தத்தை விடு தூது" எனும் இலக்கியத்தில் காதலி மீது தலைவனின் காதல் உணர்வை பரீட்சார்த்திகள் சரியாக விளங்கிக்கொள்ளாமல் விடை எழுதியிருந்தமை.
- இப்பாடல்களின் மூலம் பெண்களின் அன்றைய சமுதாய நிலைமையினைப் பற்றி விளக்கமில்லாமல் விடையளித்திருந்தமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- பாடலடியில் காதலியை உணர்வுபூர்வமாக பலவகையிலும் வர்ணிக்கும் வரிகளை இனங்கண்டு மாணவர்களுக்கு விளக்கிக் கூறுதல்.
- காதலன், காதலின் மீதான அன்பின் ஆழத்தையும் காதல் உணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் பாடல் வரிகளை இனங்கண்டு மாணவர்களுடன் கலந்துரையாடுதல்
- பாடல்களில் பெண்ணின் விருப்பத்திற்கு இடமளிக்காமை, அடிமையாக வைத்திருத்தல், வீட்டில் அடைத்து வைத்திருத்தல், கல்வி உரிமை மறுக்கப்படல் போன்றவற்றினூடாக அக்காலப் பெண்களின் சமுதாய நிலைமையினைப் பற்றிக் கலந்துரையாடல்

**வினா இல.** 4

**4. அற்றைத் திங்கள்** என்ற நாடகத்தில்

(அ) நாடிழந்த பாரி மகளிரின் சோகம்

(ஆ) பறம்புமலை மீதான கபிலரின் பற்று

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்,

(அ) ஆரம்ப காலத் தமிழ்ச் சினிமாவில் நாடகத்தின் செல்வாக்கு

(ஆ) நல்ல சினிமாவின் பண்புகள்

ஆகியன விபரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**(அ) பாரிமகளிரின் சோகம்**

- அற்றைத் திங்கள்.......பாடலூடாக

  அன்று அவ்வெண்ணிலவில் நம்மோடு இருந்த எந்தையும் நம் குன்றும் இன்று எம்மோடு இல்லையே என ஏங்குதல்

- நாடகத்தில்....
  - தான் கட்டிய கூட்டில் தாய்முகம் அறியாத தம்மை புறாக்குஞ்சுகள் போல அன்போடு பாதுகாத்து தந்தை வளர்த்தமையை நினைவு கூர்தல்
  - சிறுவயதில் தாம் அனுபவித்து மகிழ்ந்த மரப்பாச்சியையும் குறிஞ்சிப்பூவையும் கண்டு இரங்குதல்
  - பறம்புமலை மக்கள் தம்மீது காட்டிய அன்பை நினைந்து ஏங்குதல்
  - மகிழ்வோடு மக்கள் வாழ்ந்த குடில்களைப் பிரிந்து செல்லவேண்டி வந்ததை நினைந்து ஏங்குதல்

**( 08 புள்ளிகள் )**

(ஆ) **பறம்புமலைமீது கபிலரின் பற்று**

- பறம்பு மலையைப் பிரிவது மலையைவிடக் கனக்கிறது எனல்
- சுனைநீரை ஒரு முடக்குக் குடியுங்கள், வாசனைப் பூக்களை நுகருங்கள், அதை நினைத்துக்கொண்டு செல்லுங்கள் எனல்
- நீர் வாரும் கண்ணில் பறம்பு மலையின் அழகிய காட்சிகள் நிற்கும் எனல்
- பறம்பின் தலைவன் பாரியுடனான நட்புப் பற்றி நினைந்து ஏங்குதல்
- பறம்புமலைச் சூழலை அனுபவித்து, இனி அது கிடையாதே என ஏங்குதல்
- ஆராமையோடு பறம்பு மலையை வாழ்த்திச் செல்லுதல்

**( 07 புள்ளிகள் )**

**( 08 + 07 = 15 புள்ளிகள் )**

**அல்லது**

(அ) **சினிமாவில் நாடகத்தின் செல்வாக்கு**

- தமிழ்ச் சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டிருந்தது. அதனால் சினிமா வளராமை
- ஆரம்பத்தில் புராண நாடகங்களே படமாக்கப்பட்டமை
- நாடகம் மாதிரியே செட் போடப்பட்டமையும் நாடகக் கோணத்தில் படமாக்கப்பட்டமையும்
- நாடகக் கம்பனிகளே சினிமாவைத் தயாரித்தமை
- சினிமாவில் உள்ளோர் (நடிகர், இயக்குநர், வசனகர்த்தா, பாடலாசிரியர்) அனைவரும் நாடகத்தலிருந்தே வந்தமை
- இன்றைய சினிமாத் தொழில்நுட்பத்திலும் நாடகத்தின் செல்வாக்கு (காட்சி, அமைப்பு, குரல், இசை) காணப்படுகின்றமை

**( 08 புள்ளிகள் )**

(ஆ) **நல்ல சினிமாவின் பண்புகள்**

- சினிமாவின் மையக்கருவைச் சார்ந்து அதன் காட்சிப்படிமங்களும் ஒலியும் அமைதல்
- சினிமா மொழியின் முக்கிய அம்சங்களாகிய காட்சிப்படிமம், ஒலி, படத்தொகுப்பு என்பவை சரிவர அமைதல்
- காட்சிப் படிமம்மூலம் கதை சொல்லப்படுதல்
- காட்சிப் படிமத்துக்கு ஒலி துணை போதல்
- படத்தொகுப்பு அர்த்தமுள்ளதாக அமைதல்
- தொழில்நுணுக்க வளர்ச்சியினால் உருவான புதிய புதிய சாதனங்களைக் கையாளுதல்
- குறியீட்டின் மூலம் மையக் கருத்தை வெளிப்படுத்தல்
- மையக்கருவுக்குத் தேவையற்ற எந்த விடயத்துக்கும் இடம் கொடாமை


**( 07 புள்ளிகள் )**

**(08 + 07 = 15 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:

வரைபு 2.26 வினாப்பத்திரம் III இன் 4 ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





4 ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். எனினும் 95% ஆன பரீட்சார்த்திகளே இவ்வினாக்களுக்கு விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய மொத்தப்புள்ளிகள் 15 ஆகும். இதில்,

00-03 வரையான புள்ளி வீச்சில் 50% ஆனோரும்
04-07 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
08-11 வரையான புள்ளி வீச்சில் 18% ஆனோரும்
12-15 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 50% ஆனோர் 3 அல்லது அதனிலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். 7% ஆனோர் மாத்திரமே 12 அல்லது அதனிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.27 வினாப்பத்திரம் III இன் 4 ஆம் வினாவின் பிரிவுகள், உப பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

4 ஆம் வினா இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் ஒரு பகுதிக்கே பரீட்சார்த்தி விடை எழுத வேண்டும். ஒவ்வொரு பகுதியும் இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது.

முதற்பகுதி தொடர்பாக, உப பிரிவு (அ) விற்கு 37% ஆனவர்களும், (ஆ) விற்கு 32% ஆனவா்களும் இரண்டாம் பகுதி தொடர்பாக உப பிரிவு (அ) விற்கு 27% ஆனவர்களும் உப பிரிவு (ஆ) விற்கு 28% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். எல்லா உப பிரிவுகளுக்கும் 40% இற்கும் குறைவான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- “அற்றைத் திங்கள்” எனும் நாடகத்தில் நாடிழந்த பாரி மகளிரின் சோகத்தை எடுத்துக்காட்டும் வரிகள் பற்றி போதியளவு விளக்கமின்மை.
- பறம்புமலை மீதான கபிலரின் பற்று இந் நாடகத்தில் நயம்பட எடுத்துக்காட்டியிருப்பினும் பரீட்சார்த்திகள் அது பற்றிய போதிய விளக்கமின்மையுடன் விடையளித்துள்ளமை.
- அற்றைத் திங்கள் என்ற நாடகம் தொடர்பான போதிய விளக்கமின்மையை பரீட்சார்த்திகள் கொண்டிருந்தனர்.

**சினிமாவில் நாடகத்தின் செல்வாக்கு**

- நாடகத்தின் செல்வாக்கு ஆரம்பகாலத் தமிழ் சினிமாவை எவ்வாறு பாதித்தது என்பதற்குரிய விளக்கத்தை கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விடையளிக்கத் தவறியமை.
- வினாவுக்கு ஏற்றவகையில் விடையளிக்காது பொதுவாக விடையளித்தமை.
- தற்கால சினிமாவுடன் தொடர்புபடுத்தி எழுதத் தவறியமை.
- நாடகத்தின் அடிப்படைப் பண்புகளை விளங்கி, அவை நல்ல சினிமாவைப் பாதிக்கும் விதம் பற்றி விளக்கத் தவறியமை.

**நல்ல சினிமாவின் பண்புகள்**

- காட்சிப் படிமம், ஒலி, படத்தொகுப்பு என்பவற்றின் முறையான பயன்பாடுகள் நல்ல சினிமாவை உருவாக்கும் விதம்பற்றி எழுதத்தவறியமை.
- தமிழ் சினிமா வளராமைக்கு நல்ல சினிமாவின் பண்புகள் அங்கு காணப்படாமைபற்றி எழுதத் தவறியமை.
- மையக்கருவுக்குத் தேவையற்ற எந்த விடயமும் நல்ல சினிமாவில் இடம்பெறாது என்பதை எழுதத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- பாரி மகளிரின் சோகத்தை எடுத்துக்காட்டும் பாடலடிகளை இனங்கண்டு பரீட்சார்த்திகளுடன் கலந்துரையாடல்.
- பாரிமகளிரின் சோகம்பற்றி நாடகத்தில் எடுத்துக்காட்டும் பகுதிகளை மாணவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் விளக்கமளித்தல்.
- பேதைமையுடையவர்களைச் சுட்டும் குறட்பாக்களில் உள்ள அணிகளை இனங்காணச் செய்து, அவற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குதல்.
- நாடகம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும்போது, செய்முறைப் பயிற்சியின் ஊடாக கற்பிப்பதன் மூலம் நாடகத்தில் வரும் விடயங்களை பரீட்சார்த்திகள் மனதில் ஆழப்பதித்தல் வேண்டும்.
- பறம்புமலை மீது கபிலர் கொண்டுள்ள பற்றை எடுத்துக்காட்டும் அடிகளை அடையாளம் கண்டு அவற்றை மாணவர்களுக்கு விளக்குதல்.
- கட்டுரைப் பகுதிகளைக் கற்பிக்கின்றபொழுது கட்டுரை ஆசிரியரின் நோக்கம், பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள், அவற்றிற்கான ஆதாரங்களை வகைப்படுத்தி மாணவர்கள் அவற்றை நினைவில் நிலைநிறுத்தும் வகையில் கற்பித்தல்.
- நல்ல சினிமா ஒன்றின் உருவாக்கத்தில் இடம்பெறும் அத்தனை விடயங்களையும் பொருத்தமான காணொளிகளைக் காண்பிப்பதன் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுறுத்துதல்.

## 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

**5. பேதைமை** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பேதையர் இயல்பு

(ஆ) பேதையர் அடையும் கேடு

**5ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(அ) பேதையர் இயல்பு

- தனக்கு கேடு தருபவற்றை ஏற்றுக் கொண்டு, நன்மை பயப்பனவற்றை விட்டுவிடுதல்
- தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஈடுபடுதல்
- வெட்கப்பட வேண்டியவற்றிற்கு வெட்கப்படாமை
- நல்லவற்றை நாடாமை
- யாரிடத்தும் அன்பில்லாமை
- பேணிக்காக்க வேண்டிய எதனையும் பேணாமை
- ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்காமை
- பேதையின் செல்வம் பிறருக்கே பயன்படுதல்
- தனது உடைமைகளை சரியாகப் பயன்படுத்தத் தெரியாமை

(ஆ) பேதையர் அடையும் கேடு


- ஏழு பிறவியிலும் வருந்தக்கூடிய நரகத்தை ஒரு பிறவியிலே ஏற்படுத்திக் கொள்ளல்
- செய்யும் வகை அறியாத பேதையின் செயல் பாழ்படும், அவன் தண்டனை பெற்று விலங்கிடப்படுவான்.

**( 04 புள்ளிகள் )**

**( 06+ 04 = 10 புள்ளிகள் )**

**5 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்:**

வரைபு 2.28 வினாப்பத்திரம் III இன் 5 ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவுக்கு 60% பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10ஆகும்.

இதில்,

00 - 02 வரையான புள்ளி வீச்சில் 38% ஆனவர்களும்

03 - 05 வரையான புள்ளி வீச்சில் 29% ஆனவர்களும்


06 - 07 வரையான புள்ளி வீச்சில் 21% ஆனவர்களும்

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 12% ஆனவர்களும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளை 38% ஆனவர்கள் பெற்றுள்ள அதேவேளை 12% ஆனவர்கள் 8 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்**- (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.29 வினாப்பத்திரம் III இன் 5 ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

5 ஆம் வினா இரண்டு பிரிவுகளை கொண்டுள்ளது பிரிவு (அ) விற்கு 46% ஆனோரும் பிரிவு (ஆ) விற்கு 38% ஆனோரும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- பேதையரின் இயல்புகளை குறட்பாக்களை மனதிலிருத்தி பொருத்தமுற விடையளிக்காமை.
- மனனம் செய்த குறட்பாக்களைக் கொண்டு பொதுவாக விடையளித்தமை.
- பேதைமை என்ற குறட்பாக்களின் பொருளை தெளிவாக அறிந்திராமை.

**பேதையரின் கேடு**

- இவ்வினாவிற்குரிய விடையை பொருத்தமான குறட்பாக்களை ஆதாரம் காட்டி எழுதத் தவறியமை.
- பொருள் விளக்கமின்றி குறள்களை மட்டும் எழுதியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- குறட்பாக்களை சந்திபிரித்து பொருள் விளங்குமாறு கற்பித்தல்.
- ஒலி - ஒளி நாடாக்களைப் பயன்படுத்துவதன் ஊடாக குறட்பாக்களை இலகுவில் பொருள் விளங்கி மனனம் செய்யும் ஆற்றலை வளர்த்தல்.
- பேதைமை எனும் அதிகாரத்தை வகைப்படுத்தி கற்பித்தல்.
(உதாரணம் - பேதைமையின் பொருள் விளக்கம், பேதையரின் இயல்பு என்றவாறாக)

வினா இல. 6

**6.** **நாட்டார் பாடல்கள்** என்ற பகுதியில்,

(அ) உழவரது வேண்டுதல்

(ஆ) அரிவி வெட்டுதல் பற்றிய சித்திரிப்பு

ஆகியன இடம்பெறுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

## 6ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**(அ) உழவரது வேண்டுதல்**

- பட்டி பெருக வேண்டும்
- பாற்பானை பொங்க வேண்டும்
- நெற்செய்கை பெருக வேண்டும்
- நாடு தழைக்க, நல்ல மழை பெய்ய வேண்டும்
- வேளாண்மை சிறக்க வேண்டும்
- எல்லோரும் வாழ வேண்டும்
- அருவி வெட்டும் இளைஞர்களுக்கு கண்ணூறு, நாவூறு ஏற்படாமல் இறைவன் காக்க வேண்டும்

**( 06 புள்ளிகள் )**

**(ஆ) அரிவி வெட்டுதல் சித்திரிப்பு**

- வளர்ந்த இளந்தாரிகள் வரிசையாக நின்று அரிவி வெட்டுதல் (ஆற்றுநீர் வருவதுபோல, புள் அதன் பின் வருவது போல, சேறும் வெள்ளமும் சேர்ந்து வருவது போல, நாரை இனம் மேய்ந்து வருவது போல)
- சினந்து (வேகத்தோடு) அரிவி வெட்டுதல்
- அரிவி வெட்டும் கருவி
  (மட்டுருக்கு அரிவாள், மாவிலங்கம்பிடி, பிடியில் வெள்ளிப்பூண்)


**( 04 புள்ளிகள் )**

**( 06+ 04 =10 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka

## 6 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் :

வரைபு 2.30 வினாப்பத்திரம் III இன் 6 ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்





6 ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இதனை 21% ஆன பரீட்சார்த்திகள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இதில்,

00-02 வரையான புள்ளி வீச்சில் 39% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 27% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 19% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 15% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 39% ஆனோர் 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 15% ஆனோர் 8 அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்** - (RD/16/03/OLபடிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வரைபு 2.31 வினாப்பத்திரம் III இன் 6 ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை




வினா இல 6 இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பிரிவு (அ) விற்கு 47% ஆனவர்களும் பிரிவு (ஆ) விற்கு 35% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர்.

**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- பொருத்தமான பாடல் அடிகளை மேற்கோள்காட்டி விடை எழுதத் தவறியமை.
- சித்திரிப்பு என்ற சொற்பதத்தின் பொருள் விளங்காமல் விடையளித்தமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- ஆசிரியர் இசையோடு பாடலை பாடிக் காண்பித்தல் அல்லது ஒலி நாடாக்களைப் பயன்படுத்தி மாணவர்கள் மனதில் நன்கு பதியுமாறு ஓசைநயத்துடன் கற்பித்தல்.
- அரிவி வெட்டுவதற்குப் பயன்படும் (பாடலில் இடம்பெறுகின்ற) பொருட்களை இணையத்தளத்தில் உசாவி காண்பித்தல் மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளல்.
- அரிவி வெட்டுவதற்கு கூறப்பட்ட உவமையின் பொருத்தப்பாட்டை தெளிவுறுத்துதல்.

வினா 7.

**7. கம்பியூட்டர்** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) கதாசிரியருக்கு கம்பியூட்டர் பற்றிய முன் அனுபவமின்மை

(ஆ) அந்த அனுபவமின்மையோடு தொடர்புபடுத்தி தனது அமெரிக்க அனுபவத்தை விபரிக்கும் விதம்

(10 புள்ளிகள்)

## 07 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்:

(அ) கம்பியூட்டர் பற்றிய அனுபவமின்மை

- கம்பியூட்டரின் தோற்றத்தைப் பார்த்துப் பயப்படுதல்
- கம்பியூட்டரில் ஆண், பெண் பேதம் இருப்பதாக நம்புதல்
- கம்பியூட்டர் வாங்குவதற்குத் தனது அறிவு போதாமையால் தன் நண்பனை அழைத்துச் செல்லுதல்
- தன் நண்பனுக்கும் கடைக்காரனுக்கும் இடையில் நடந்த உரையாடலை விளங்கிக் கொள்ளமுடியாது திகைத்தல்
- '486 கம்பியூட்டர்' என்பதைத் தவறாக விளங்கிக் கொள்ளல்

**( 06 புள்ளிகள் )**


(ஆ)
- அமெரிக்காவில் தூண்டில் கடைக்குச் சென்றபோது பட்ட அனுபவத்துடன் கம்பியூட்டர் பற்றிய தனது அறிவின்மையை தொடர்புபடுத்துதல்
- தூண்டில் கடையின் பிரமாண்டத்தைக் கண்டு வியத்தல்
- தூண்டில் கடையில் பணிப்பெண் கேட்ட கேள்விகள் புரியாது திகைத்தல்

**( 04 புள்ளிகள் )**

**( 06+ 04 = 10 புள்ளிகள் )**

## 7 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்

வரைபு 2.32 வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்




7 ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும். இவ்வினாவுக்கு 16% ஆன பரீட்சார்த்திகள் விடையளித்துள்ளனர்.

இதில்,


00-02 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
03-05 வரையான புள்ளி வீச்சில் 32% ஆனோரும்
06-07 வரையான புள்ளி வீச்சில் 17% ஆனோரும்
08-10 வரையான புள்ளி வீச்சில் 9% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 42% ஆனோர் 2 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ள அதேவேளை 9% ஆனோரே 8 அல்லது அதற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**மூலம்-** (RD/16/03/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

tment of Examinations - Sri Lanka

வரைபு 2.33 வினாப்பத்திரம் III இன் 7ஆம் வினாவின் பிரிவுகளுக்கான இலகுதன்மை




**மூலம்** - (RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி தரவு, 2020, இ.ப.த)

வினா இலக்கம் 7 இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பிரிவு (அ) விற்கு 34% ஆனவர்களும் (ஆ) விற்கு 43% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை:**

- பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு விடைகளை, பொதுவான கதைப்பாங்கிலேயே எழுதியுள்ளனர். சரியான குறிப்புகளை மேற்கோள்காட்டி விளக்கி எழுதுவதில் பலர் இடர்பட்டுள்ளனர்.
- கம்பியூட்டர்பற்றிய முன் அனுபவமின்மையை அமெரிக்க தூண்டில் கடை அனுபவத்துடன் தொடர்புபடுத்தி அதனை விளக்கமாக எழுதத் தவறியமை.
- பொருத்தமான சம்பவங்களை உதாரணம் காட்டி எழுதாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சிறுகதையை கருத்தூன்றி வாசிப்பதற்கு வழிகாட்டுதல்.
- கதாசிரியரின் எண்ணப்போக்கு கதைமூலம் கூற விளையும் விடயம் என்பவற்றை தெளிவுபடுத்துதல்.
- வினாக்களுக்குப் பொருத்தமான வகையில் விடையளிக்கும் ஆற்றலை, போதிய பயிசி

## 2.3.5.3 வினாப்பத்திரம் III இன் பாட அடைவை விருத்தி செய்வதற்கான கற்றல்-கற்பித்தல் ஆலோசனைகள்

- ⋆ விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை விளக்கமாகவும் தெளிவாகவும் கற்பித்தல்.
- ⋆ பாடப்பரப்புகள் தொடர்பாக வாய்மொழி வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தல்.
- ⋆ நூல், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட காலம், பின்னணி போன்ற பொதுவான விளக்கத்தினை ஆசிரியர் வழங்குதல்.
- ⋆ இலக்கியம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.
- ⋆ மாணவர் மன்றங்களில் மாணவர்களே இலக்கியச் சொற்பொழிவுகள், விவாதங்கள், சுய ஆக்கங்கள் என்பவற்றை முன்வைப்பதற்கு ஊக்கமளித்தல்.
- ⋆ பாடப்பரப்பில் பொருத்தமானவற்றை நாடகமாக்கி நடிக்க வழிகாட்டுதல்.
- ⋆ செய்யுள் கற்பித்தலில் பாவோதல் முறையைக் கையாளுதல்.
- ⋆ பாடப்பரப்பில் இடம்பெறும் சொற்கள், சொற்றொடர், அணிச் சிறப்புக்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.
- ⋆ பாடப்பரப்பினை உள்ளடக்கிய அருஞ்சொற்பொருள் அகராதி தயாரிக்க வழிகாட்டுதல்.
- ⋆ மாணவர்களின் ஆக்கங்கள் அடங்கிய கையெழுத்து சஞ்சிகை வெளியிடுவதற்கு ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்தல்.
- ⋆ பொருத்தமான இடங்களில் சந்தர்ப்பம் கூறி விளக்குவதற்கான பயிற்சிகளை வழங்குதல்.
- ⋆ கட்டுரை ஆசிரியர்கள், கதாசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள் முதலானோர் தமது கருத்துக்களை புலப்படுத்தக் கையாண்டுள்ள உத்திகள்பற்றி போதிய விளக்கமளித்தல்.
- ⋆ இலக்கியப் பகுதியில் இடம்பெறும் செய்யுட்கள், உரைநடைகளில் குறுவினாக்களுக்கு திட்ப நுட்பமாகவும் சுருக்கமாகவும் விடையளிக்க மாணவர்களுக்குப் பயிற்சிகள், வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும்.
- ⋆ நூல், நூலாசிரியர் படைப்புக்கள், எழுந்த காலம், நூலெழுந்த பின்னணி, ஆசிரியர் கையாண்ட உத்திகள், பிரதேசம் போன்ற அறிமுகங்களுடன் கற்றல் கற்பித்தலை வகுப்பறையில் நிகழ்த்தல்.
- ⋆ கட்டமைப்பு வினாக்களுக்கு விடைகளைப் பொருத்தமான முறையில், கட்டுரைப் பாங்கில் பயிற்சிகளை வழங்கி இடம்பெறவேண்டிய உள்ளடக்கத்தை வலியுறுத்தி, அடைவு மட்டத்தை மேற்கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ளல்.
- ⋆ செய்யுள் இலக்கியங்களை சந்திபிரித்துக் கொண்டுகூட்டி பொருள் விளங்கும் வகையில் புத்துருவாக்கச் சிந்தனை மேம்பட மாணவர்களை நெறிப்படுத்தல்.
- ⋆ நாடகம், விவாதம், ஒப்படைகள் மேடைப் பேச்சுப் போட்டிகள் போன்றவற்றின்மூலம் மாணவர்களின் தேடல் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்து அறிவுத்திறன், ஆளுமை மிக்கவர்களாக நெறிப்படுத்தல்.
- ⋆ பரீட்சார்த்திகள் இலக்கியப்பகுதிசார்ந்த வினாக்களுக்கு விடையளிக்கும்போது வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களையும் வழிகாட்டற் குறிப்புகளையும் சரியாக வாசித்து, விளக்கி வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். குறுவினாக்கள், கட்டமைப்பு வினாக்கள், தெரிவு வினாக்கள் என்பவற்றிற்கான நேர ஒதுக்கீடுகள், தெரிவு வினாக்கள், கட்டாய வினாக்கள் போன்றவற்றில் வினாக்களை முதலில் சரியாக இனங்கண்டு விளக்கிக் கொண்ட பின்னர், வினாக்களை நன்றாக வாசித்து, கிரகித்து, தெளிவாக விளக்கி விடையளித்தல்.

- ⋆ குறுவினாக்களுக்கு விடையளிக்கும்போது, சுருக்கமாகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் விடையளிக்க வேண்டும்.
- ⋆ கட்டமைப்பு வினாக்களுக்குப் பொருத்தமான முறையில் கட்டுரைப்பாங்கில் விடையளிக்கும்போது ஏற்ற மேற்கோள்கள், குறியீடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி பயிற்சிகள் வழங்குவதன்மூலம் அடைவு மட்டத்தை மேம்படுத்தலாம்.
- ⋆ இலக்கியப் பாடப்பரப்பில் உள்ள பாடப் பரப்புக்களை நுணுக்கமாகவும் தெளிவாகவும் கற்பித்து மாணவர்கள் விடையை சரியாக எழுதுவதற்கு வழிகாட்டுதலானது சிறந்த பெறுபேற்றுக்கு வழிவகுக்கும்.
- ⋆ அணிகள், படைப்பாசிரியர்கள், கையாண்ட உபாயங்கள், உத்திகள், காலப்பகுதிகள் என்பவற்றைத் தெளிவாக கற்பித்தல் வேண்டும்.
- ⋆ இலக்கியத்தைக் கற்பிக்கும்போது மாணவர்களின் வாழ்வியலுடனான நடைமுறை விடயங்களை உள்ளடக்கியும் இலக்கியங்களை நயந்து இரசனையுடன் கற்பித்தும் மாணவர்களின் ஆளுமை வெளிப்படும் வகையில் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.